1470

1470

ஸ்ரீ ஆரிய பாலகான சபா, ஸ்ரீ பாலவிநோத நாடக சபா
இன்னும் சகல நாடகக் கம்பெனியார்களும்
நடத்திவரும்

# அல்லி - அர்ஜுனா

தமிழ் நாடக ஆசிரியர்



ச. க. சங்கரலிங்கக் கவிராயர் எழுதியது.

OFFICE OF THE REGISTRAR
3-MAR 1933

பிரசுரித்தவர்:

N. தியாகராய முதலியார்

சென்னை.

1933.

(All Registered Copy Right)

[அ

O-,2MSL7,A
N33
85316

உ

முருகன் துணை.

மாஸ்டர் T. M. மருதப்பா, S. S. சங்கரன், K. S. கன்னையா,
T. ராஜப்பா, K. K. இராமசாமி, A. S. மணி, S. S. தனுசாம்பாள்,
K. அரங்கநாயகி, R. கோமளம், P. கலியாணி
இவர்களாலும் இன்னும் பலவித
நாடகக் கம்பெனியார்களும்
பாடி நடித்துவரும்

# அல்லி - அர்ஜுனா

தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் சரபம்,
உடுமலை ஸ்ரீமான் முத்துசாமி கவிராயர் மாணவர்
சென்னை:
ஸ்ரீ ஆரிய பாலகான சபா-1, ஸ்ரீ பால விநோத நாடக சபா-2
உபாத்தியாயர்

**ச. சு. சங்கரலிங்கக் கவிராயர்**

எழுதியது.

புஸ்தக வியாபாரம்:
N. தியாகராய முதலியார் அவர்களால்
ஸ்ரீகணநாயகர் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது
சென்னை.

1933.

காப்பிரைட்] [அணா 6.

# என்னுரை

எல்லாம்வல்ல இறைவன் திருவருளாலும் எனது குருமூர்த்தியாம் உடுமலை சரபம் ஸ்ரீமத் முத்துசாமி கவிராயரவர்களின் ஆசீர்வாத மேன்மையினாலும் நமது நாடகாபிமானிகளின் அன்பின் பெருக்காலும் என்னலெழுதி, "ஸ்ரீ ஆரியபாலகானசபா-1" "ஸ்ரீ பாலவிநோத நாடக சபா-2" முதலிய சகல நாடக நடிகர்களால் நடித்துப் பாடப்பெற்று வரும் பாரெங்கும் "அல்லி அர்ஜுன" சரித்திரம் இதுசமயம் வெளி வரலானது.

இந்நூலை வித்வத்ஸ்ரீ புகழேந்திப் புலவர் அவர்கள் பாடியதாகப் பகர்வோர் பலருண்டு. அது பொருந்தாதென்பதை இங்கு விவரித் தெழுதப் பெருகும். எவ்விதமாயினும் நாடக மேடைக்கு இந்நூல் முதன்முதலாக ஆலந்தூர் கம்பெனியாரவர்களால் இரண்டுபாகமாகவும் நாடக ரூபமாகவும் நடந்தேறியபின்னர், தமிழ் நாடகத் தலைமையாசிரியர் வித்வத்ஸ்ரீ T. T. சங்கரதாஸ் சுவாமியவர்களால் இக்கதை ஒரு இரவில் நடந்தேறும்வண்ணம் நாகரீகத்துக்கேற்றபடி எழுதப்பெற்று பல நடிகர்களாலும் நடத்தும் பிரசித்தப்பெயர்பெற்று நிலவியது.

ஆன்றோர்களாம் நாடகாசிரியர்களின் ஆசீர்வாத மேன்மையால் என்னலியற்றிய சில புதிய பாடல்களுடன் வெளிவரு மிப்புத்தகத்தை அபிமானிகளாகிய சகலரும் அங்கீகரிக்கக் கோருகிறேன்.

அன்றியும், இந்நூலின் சகல வுரிமைகளும் புஸ்தகவியாபாரம் நாகப்பட்டினம் தியாகராய முதலியார், அவர்களுக்கே வுரியதாதலின், மற்றவர்கள் இப் புத்தகத்தையேனும். இப் புத்தகத்திலுள்ள பாடல்களையேனும் அச்சிட்டு வெளியிடில் புஸ்தகரிஜிஸ்டர் சட்டப்படி சகல நஷ்டத்திற் காளாவார்களென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

9-10-33
சென்னை.

அன்பன்:
கவிராஜ் ச. சு. சங்கரலிங்கன்.
நாடகாசிரியன்.

## நாடக நடிகர்கள்

| | |
|---|---|
| அல்லிராணி | கதாநாயகி |
| அர்ச்சுனன் | கதாநாயகன் |
| கிருஷ்ணன் | துவாரகாதிபதி (அருச்சுன சகாயன்) |
| சுபத்திரை | அர்ச்சுனன் மனைவி |
| பீமன் | ஷை தமையன் |
| பிடாரன் | பாம்பாட்டி |
| குறத்தி | மலைவனவாசி (கிருஷ்ணனது மாறுவேடம்) |
| சேங்கமலம்<br>பவளச்சேனை<br>கனகாம்புஜம்<br>ரத்தினாம்பாள்<br>கோத்தவால் | அல்லியின் தோழிகள் |
| சகாதேவன் | அர்ச்சுன சகோதரன் |

குறவர், குடிகள், தோழிகள், சேனாதளகர்த்தவீரர் முதலியோர்

நாடகம் நிகழிடம்

மதுராபுரி, இந்திரப்பிரஸ்தம்.

உ

முருகன் துணை.

# அல்லி-அர்ஜுனா

## விநாயகர் துதி-வெண்பா

அச்சுதனு மர்ச்சுனனு மாடுந்தீர்த் தக்கதையை
பக்ஷமிகு செந்தமிழாற் பாடவே—இச்சமயம்
துங்கக் கரிமுகத்தின் றூயவரு ளேசிறக்குந்
தங்கக் கழலிணையே சார்பு.

சீன்—1. இடம்—முன் காடு

நடிகர்:—அர்ச்சுனன், கிருஷ்ணன்.

[ஸ்ரீ கிருஷ்ணர்ச்சுனரிருவரும் வெளிவந்து]

### அர்ஜுனன் பாட்டு.

முருகன் திருமால் மருகன்-என்ற மெட்டு.

பல்லவி

செல்வோம் தீர்த்த யாத்திரை செய்திடவே
எந்தன்-சிந்தைக்குகந்த கோவிந்தா யிந்த வேளை (செ)

அநுபல்லவி

சொல்லும் தர்மர் சொற் பிசகாமலே
சுகமுந்திய தலமெங்கினு
முறுவிந்தைக ளதுகண்டிட (செ)

சரணம்

மாயவா என்னருமை மைத்துனா கோபாலா
மந்தகாச முடன் வாராய் செல்லும்
மார்க்கத்தில் பற்பல தீர்த்த விசேடத்தை
மாதவனே கண்ணால் பாராய்
தாயகமாகிய சந்நிதானங் கண்டு
தவமே புரி சுபயோகியர்
பதமே தொழ இதுவே தருணம் (செ)

வ-ம்:—மாமா! தர்மண்ணாவின் வுத்திரவின்படி ஆங்காங்குள்ள தீர்த்த யாத்திரை சென்று வர யாதொரு தடையுமில்லையே.

கிரு. வ-ம்:—அர்ச்சுனு! தடையில்லாமல் ஸ்தல மூர்த்திகளைத் தெரிசித்து தீர்த்த ஸ்நானம் செய்துவரலாம். ஆனல் நீமட்டும் போகுமிடங்களில் வேறு காரியங்களைக் கவனிக்காமல் வர வேண்டும்.

அர்- வ-ம்.—தடையில்லை. தங்கள் உத்திரவின்படியே நடக்கின்றேன்.

[போகின்றனர்]

(சீன் முடிவு.)

---

சீன்—2. இடம்—முன் காடு

நடிகர்:—முத்துவணிகன், அர்ச்சுனன், கிருஷ்ணன்,

## முத்துவணிகன் பாட்டு

கன்னத்திலே பற்குறிகள்-என்ற மெட்டு

கண்ணிகள்

முத்தளக்கு மீனுட்சியே முத்துபடி குறைந்திட்டதே
இத்தருணம் அல்லிராணிக் கென்னபதில் சொல்லுவேனே (மு)

பார்புகழுஞ் சொக்கநாதா படிமுத்து குறைந்திட்டதே
ஆரிடத்தில் சொல்லுவேனுன் அல்லிராணி தண்டிப்பாளே (மு)

வ-ம்:—அம்பிகா! மதுரை மீனுக்ஷி நான் ஏது செய்வேன். அல்லியரசிக்கு வருட முறை தவருமல் கொடுக்கக் கூடிய முத்து குறைவானதே இது செய்தி கேட்டவுடன் வாளோங்கிக் கழுத்தை வீசிடுவாளே, ஐயோ! இது வேளையில் எனக்குத்துணை செய்ய வல்லவரார்.

[கிருஷ்ணர்ச்சுன ரிருவரும் வெளிவந்து]

அர். வ ம்:—மாமா! நினைக்க முத்தி பிறக்க முத்தி இறக்க முத்தி தரக் கூடிய மகா க்ஷேத்திரங்களையும் கங்கா, யமுனு, சரஸ்வதி, கோதாவரி முதலிய தீர்த்தங்களையும் தரிசித்து பூலோக கைலாசமாகிய இம்மதுரைமாநகர் எல்லையடைந்தோம். சோமசுந்தரக் கடவுளைக் கண்டு வைகை ஸ்நானம் செய்து இராமலிங்க சேது ஸ்நான தெரிசனம் செய்வோம் வாருங்கள்.

கிரு. வ.ம்:—நல்லது உன்னிஷ்டப்படியே செல்வோம் வா.

[இருவரும் செல்லுஞ்சமயம் முத்துவணிகன் பாடுகிருன்]

## முத்துவணிகன் பாட்டு

### ஷை மெட்டு

ஆலவாய் மீனாட்சியே ஆமணக்கு குறைந்திட்டதே
காலமிதி லல்லிராணி கண்டிப்பாளே காத்திடுவாய் (மு)

வ-ம்:—அல்லியரசிக்கு என்குறையை எடுத்துக்கூறி என் தலையைக் காப்பாற்றுவோரார். ஹே மீனாம்பிகா நீயே துணை.

[அர்ச்சுனன் உற்றுக்கேட்டு]

அர். வ-ம்:—மாமா, கைலாசபதியே சோமசுந்தரக் கடவுளாக அவதாரம் செய்து 64-திருவிளையாடல்களைச்செய்த இம் மகா மதுரை மாநகரை நாடி நாம் செல்ல எத்தனிக்குங்கால் யாரோ ஒருவன் அழுதுகொண்டு நிற்கின்றான், என்ன காரணமோ தெரியவில்லை.

கிரு. வ-ம்:—அர்ச்சுனா! என்னமோ வழிப்போக்கன் தன் குறையை நினைந்தழுகின்றான். அதைப்பற்றி உனக்காவதென்ன.

அர். வ-ம்:—அப்படியல்ல அவனது குறையை விசாரித்தேகுவதே நலம். தாம் சற்றிங்கிரும். [செட்டியிட மணுகி]

ஐயா! தாம்யார். எதற்காக இங்கு நின்று,

## அர்ஜுனன் பாட்டு

### இராகம்-மோகனம், தாளம்-ஆதி.

பல்லவி

சோகமுற்றழுவதேனையா அதையெனக்குச்
சொல்லுவீரேநீர்தானையா (சோ)

அநுபல்லவி

ஆகவுனக்குத்துன்பம் யாரால்விளைந்தசன்மம்
வேகமுடனெடுத்து விளம்புவீரையாமுன்னம் (சோ)

சரணம்

அல்லி அல்லி என்றழுது
சொல்லிசொல்லி நின்றிப்பொழுது
மெல்லமெல்ல மனம்வாடி
மேவுநீ ரிடம்நாடி

சல்லியமில்லாதென்முன் சாற்றுவீர்சவிஸ்தாரத்தை
சங்கதிதானுமென்ன மங்கையவளார்முன்னம் (சோ)

வ-ம்:—ஐபா செட்டியாரே! என்னகாரணம். எதற்காக இங்கிப்படி புலம்புகின்றீர். பயப்படவேண்டாம் யார் விஷயமானுலும் தைரியமாய் சொல்லும் நாங்கள் காப்பாற்றுகின்ருேம்.

முத். வ-ம்:—ஐயா! நீங்கள் மகாராஜாவைப்போல் தோணுகின்றீர்கள். உங்களுக் கேனிந்தக்கவலே. வேலேயைப்பார்த்து செல்லுங்கள்.

அர். வ-ம்:—அப்படியல்ல. உம்மைப் பார்க்க பரிதாபமாயிருக்கிறது. மேலும் அழுதவண்ணமாக நிற்கின்றீர். என்ன குறை என்பதை தெரிவித்தால் எங்களா லானசகாயம் செய்கின்ருேம்.

முத். வ-ம்:—ஐயா! இந்தப் பட்டணத்து மகாராணிக்கு வருடவாரியாக முக்கலமுத்து கொடுப்பது வழக்கம். இம்முறை கலமுத்துக் குறைகின்றது. இன்றைக்கு ராஜகெடுவு. கொண்டுபோய் கட்டாவிட்டால் சிரசாக்கினை வரும். இதுதான் விஷயம்.

அர். வ-ம்:—அடே! இதென்ன ஒன்றும் விளங்கவில்லே முக்கல முத்தென்கின்ருய். மகாராணி யென்கின்ருய் விவரமாகச் சொல்லப்பா.

முத் வ-ம்:—சாமி வாயைத்தான் திறக்கலாமா. மூச்சைத்தான் விடலாமா. கண்ணைப்பிடுங்கிடுவாளே போயிட்டுவாங்க சாமி.

அர். வ-ம்:—செட்டியாரே! பயப்படவேண்டாம். யார்விஷயமானுலும் சொல் நான் பார்த்துக் கொள்கிறேன்.

முத். வ-ம்:—பெரிய இடத்து பேச்சுங்க. நமக் கென்னாத்துக்கு. நீங்கள் யார். எங்குவந்திங்க, எந்த ஊருங்கோ.

அர். வ-ம்:—நாங்கள் வடதேசம் வழிப்போக்கர்கள், நாட்டுவளம்பார்க்க வந்தவர்கள் யோசிக்காதே சொல்.

முத். வ-ம்.—ஆமாம் எங்க நாட்டிலே இப்படியெல்லாம் வரமாட்டாங்களே. பெண்ணரசு. ரொம்பகண்டிப்பு கழுத்தை வீசிடுவாளே.

அர். வ-ம்.—மாமா! இதென்ன மிக்க ஆச்சர்யமாக இருக்கின்றது. கவனியுங்கள்.

முத். வ-ம்.—ஆமாம். ஆயிரம் சிப்பாய் ஆண்பிள்ளேயும் சரி. ஒரு சிறு குட்டி கத்திகட்டிவந்தாலே போதும் அம்மாடி வாளே மரங்கணக்காகத்தான் வீசிடுவாளே. ஐபா உடம்பு நடுங்குதே. அப்படி காளியம்மன் சன்னதம் வந்தாற்போலேதானே கிர்என சுத்துவா.

அர். வ-ம்.—மாமா இப்படி யிருக்குமோ.

கி. வ-ம்.—இல்லாதவிஷயம் பிறக்குமா. இன்னுங்கேள்.

அர். வ-ம்.—செட்டியாரே விவரமாய் சொல்லும்.

முத். வ-ம்.—ஐயா! நீங்க இந்த ஊருக்கு வந்தவங்களில்லேயோ அப்படியானு சொல்ரேன். இந்த மதுரைமாநகருக்கு ஒரு மவராசியுண்டு. அல்லியரசியென்று பெயர். பெண்ணரசுதான். லக்ஷம் பெண் வீரருண்டு. யானைதான், குதிரைதான், ரதந்தான், கோடி கோடியுண்டுங்க. ஆனுல் ஆண்பிள்ளை வாசனையே கிட்ட வரப்படாது. ராஜராஜாக்களெல்லாங் கப்பங் கட்டவேண்டும். நல்ல வயசு. நல்ல அளகு. ஜகஜ்ஜோதிதான் தேகம். இன்னுங் கன்னிதான். கல்யாணம் நடக்கவில்லே வாளேந்தி புறப்பட்டால் மூனு கண் படைத்தவன்தான் முன்நிற்பானு. அந்த மீனுட்சிதான் அவுங்க. என் கண்ணுணே சாமி.

அர். வ-ம்.—மாமா! கவனித்தீர்களா. இந்தக்கதை நிஜந்தானு அறிந்தறியாதவர்போல் தாமு மலேக்கின்றீர்.

கிரு. வ-ம்.—அர்ச்சுனு! என்ன கதை யென்கின்றுய் அந்த மனிதன் இந்தப் பட்டணத்தை யாளுகிற அரசி என்கின்றுன். புகழ்ந்து பேசுகின்றுன். பெயரைச்சொல்லவும் பயப்படுகின்றுன்.

அர். வ ம்.—செட்டியாரே பயப்படாதே. உனக்கு வேண்டியது தருகிறேன். இன்னும் தெரிந்ததை சொல்.

முத். வ-ம்.—ஐயா! நீங்க சாவகாசமாகக் கதைகேட்கிரீங்க. என் புத்தி எனக்கு சுவாதீனமில்லே. கச்சேரிக்குப் போகவேணும். வாரதானியஞ் செலுத்தவேணும். மழையில்லே, சரியான விளைவில்லே. இன்றைக்கு ராஜகெடுங்க. ஜாதியிலே வாணியச்செட்டிங்க. கலமுத்து குறையுதுங்க. எங்கே போவேன்.

அர். வ-ம்:—மாமா! இந்தக் குடிகளென்ன இப்படிப் பயப்படுகின்றுர்கள். இவ்வித செங்கோலுமுண்டோ.

கிரு. வ.ம்:—அதென்ன அப்படிக் கூறுகின்றுய். உத்தம வீரர்களின் செங்கோல் அப்படித்தான் இருக்கும்.

அர். வ-ம்;—பெண்கள் அப்படி யிருப்பார்களோ' நான் நம்பவில்லே' இது புதுமை.

கிரு. வ-ம்.—ஏன் இருக்கக்கூடாது. நானும் கேள்விப்பட்டிருக்கின்றேன். இந்த அல்லி அரசியின் ரூபகுண விஷயங்களைப் பற்றி ஒரு சமயம்.

அர். வ ம்:—ஐயா செட்டியாரே! நான் போனுல் மரியாதை செய்தழைப்பாளா.

முத். வ-ம்:—நீங்கள் எம் மாத்திரம். அந்த இந்திரன் சந்திரன் வந்தாலும் லக்ஷியம் செய்யமாட்டாங்க. பேட்டியே கிடைக்காதே.

அர். வ-ம்.—அப்படியா. அப்படியா. என்ன சொன்னாய்.

கிரு. வ-ம்:—அர்ச்சுனா பொறு. ஏன் அவமானப்படுகின்றாய், வுன்னி லும் வீரர்கள் எத்தனை பேர்களோ ஆணில் பெண்ணில் பூமிக் குப் பூஷணமாகப் பிறந்திருப்பவர்கள் எத்தனையோ பேர்- அவச ரப்படாதே.

அர். வ-ம்:—ஐயா செட்டியாரே! தயவுசெய்து அவளுடைய விருத் தாந்த விசேடங்களை விவரமாகச் சொல்லக்கூடாதா.

முத்து: வ-ம்.—ஐயா! உங்களிஷ்டப்படியே சொல்கிறேன். கேளுங் கள்.

## முத்துவணிகன் பாட்டு

அள்ளிஅள்ளி குடிக்கும்-என்றமெட்டு

கண்ணிகள்

அல்லியென்னும்பேருடைய மெல்லியவளழகைத்தான்
சொல்லிடக்கேளுமையனே எனதையனே
சொல்லிடக்கேளுமையனே வெகு
அற்புதமானவி சித்திரசுந்தரி
விற்பனர்போற்றும சத்துவதந்திரி (அல்)

சேலோவுருண்டவிழி பாலோஎனுமொழி
மாலாழிதந்தமங்கையே இளநங்கையே
மாலாழிதந்தமங்கையே இந்த
தேசப்ரகாசவி லாசமனோகரி
ஆசைக்கிசைந்தச காயஜனேஸ்வரி (அல்)

வில்லாளியாம்விஜயன் வேண்டும்விநோதமே
மேலோகதெய்வசாதமே சங்கீதமே
மேலோகதெய்வசாதமே இந்த
மேதினிமீதினி லேயவளுக்கிணை
வேறினியாரைநான் கூறுவேனையனே (அல்)

கிரு. வ-ம்.—ஏ செட்டி! போதும் நிறுத்து. இந்தப் பெண்புத்தி பிடி த்தவனைக் கண்டு தக்கபடி பினத்துகின்றாய். உன் வேலையைப் பார்.

அர். வ-ம்.—மாமா! அவனைக் கோபிப்பதேன். இன்னம் சொல்லட் டுமே. கேழ்க்கக் கேழ்க்க இன்பமாயிருக்கிறதே. எனக்கு சலிச்க வில்லையே. இப்படியும் ரூபம், வயது. கல்வி, சௌரியம் உடைய வள் நற்குலவதியுமா யிருப்பாளா செட்டியாரே, இப்போதுமக்கு சேரவேண்டிய முத்தெவ்வளவு.

முத்து- வ-ம்.—கல முத்துத்தான் சாமி.

அர். வ-ம்.—மாமா அவன் கோரிய முத்து நிரம்ப அனுக்கிரகம் செய்யும்.

கிரு. வ-ம்.—நல்லது. அப்படியே செய்தேன், செட்டி இங்கு நில்லாதே, ஓடிப்போய்விடு.

முத்து. வ-ம்.—சாமி ரொம்ப நமஸ்காரம். நீங்கள் என்றென்றைக்கும் க்ஷேமமாய் வாழணும். போய்வரன் சாமி.

[செட்டி போகிருன்.]

கிரு. வ-ம்.—அர்ச்சுன ! வா. வைகையில் ஸ்நானம் செய்து மேலாக வேண்டியவற்றைக் கவனிப்போம்.

அர். வ-ம்.—மாமா ! அதிருக்கட்டும். இப்போது இந்த செட்டி சொல்லிப்போனதைக் கவனித்தீரா.

## அர்ஜுனன் பாட்டு

### மைத்துன இதுவென்ன-என்றமெட்டு

பல்லவி

இதுவென்ன ஆச்சர்யம் மைத்துன-எந்தன்
இருதயந்து டிக்குது சற்குண (இது)

அநுபல்லவி

விதவிதமாகவே விளம்பினனேசெட்டி
வேறினிமேலென்ன நீரேசொல்லுமதட்டி (இது)

சரணம்

ஆண்பிள்ளைஎன்றவர் கூடாதாம்-ஆனல்
அவள்பொம்மைகொடிசற்று மாடாதாம்
வீண்பேச்சைபேசியே மினுக்கும்ஜெகஜாலி
மேன்மையழியமணம் நானேசெய்வேனித்தினம் (இது)

விட்டுவிட்டால்கேலி யொட்டுமே-அவள்
விருதறுத்தால்பெயர் கிட்டுமே
சட்ட மிவளுக்கென்ன தானெருபெண்பிள்ளை
தாலிகட்டாவிட்டா லல்லோநான்வீண்பிள்ளை (இது)

அர். வ-ம்.—மாமா ! கேவலமாகிய ஓர் பெண் இவ்வளவு பராக்கிரமத்தை வகித்திருக்கிருளென்று நாம் கேள்விப்பட்டு சும்மா போய் விடுவோமாகில் கிருஷ்ணர்ச்சுனுளென்னும் பேருக்கு அது புகழா

குமா. ஏன் மாமா பேசாமலிருக்கின்றீர். வாரும் சீக்கிரம் சென்று அவளைக் கண்டு அவளுடைய ஆரவாரத்தை அடக்கிச் செல்வோம்.

## கிருஷ்ணன் பாட்டு

எப்படி இருந்தால்-என்றமெட்டு

பல்லவி

இத்தனைவருத்தமுனக்கென்ன அவள்
இப்படியிருப்பதினால் தப்பிதம்நமக்குமென்ன (இத்)

அநுபல்லவி

சுத்தமாய்நடப்பேனென்று சொன்னமொழியைமறந்து
அற்புதவல்லியென்றென்முன் விற்பனம்படிக்கலானாய் (இத்)

சரணம்

உலகத்தில்பலவித மெனத்தெரியாயோ
வுண்மையென்வார்த்தை என்பதையறியாயோ
வலவனீயானாலு மாதுபெண்ணன்றோ
வகையறியாதவள் பகைநமக்குண்டோ (இத்)

வ-ம்.---அர்ஜுனா! அவள்எப்படியிருந்தால் உனக்கென்ன. அன்றிஎனக்கென்ன, இதுவுலகவழக்கம், தேசங்கள் தோறும் வெவ்வேறு விதமாகத்தான் இருக்கும். அதைப்பேசி யாவதென்ன. செல்வோம் வா.

அர். வ-ம்.—மாமா! அப்படியல்ல பெண்ணாகப் பிறந்தும் இவ்வளவு தாருட்டியமாக இருக்கிறாளென்றால் அவளென்ன மனிதப்பிறப்பா, அல்லது தெய்வப்பிறப்பா, எதையும் நேரில்பார்த்துப் போவது நல்லதல்லவா.

கிரு. வ-ம்.—அர்ச்சுனா! உன் வேலையை ஆரம்பித்துக்கொண்டாயே நல்லது பார்த்துவிட்டு வருவதற்குத் தடையில்லையே.

அர். வ-ம்.--மாமா! தடையொன்றுமில்லை. அந்த மாதரசியை நேரில் பார்த்தால் போதும்.

கிரு. வ-ம்.—அர்ச்சுனா! இப்போது வனவிலங்குகளையேவி பயிர்களை அழிக்கச் செய்கிறேன். அல்லி வேட்டையாட வருவாள். அதுசமயம் மறைவாகவிருந்து பார்த்துவிட்டுப் போகலாம் வா.

[போகின்றனர்.]

(சீன் முடிவு.)

சீன்—3. இடம்—அல்லி தர்பார்

நடிகர்:—அல்லி, தோழிகள், குடிகள்.

[சபையில்யாவரும் அமர்ந்திருக்க
அல்லி கொலுமுகம் வருதல்]

சிறைவாயிற் காவலிருந்தாள்-என்ற மெட்டு

பல்லவி

சொக்கலிங்கேஸ்வரித்தாயே துணைவந்தருள்வாயே (சொ)

அநுபல்லவி

தக்கமந்த்ரோபசாரி தகுந்தசூரசம்மாரி
மிக்கமெஞ்ஞானபுராணி மேதக்கவேணி (சொ)

(தொகையரு)

அடியார்கள் முடிமீது விளையாடு மகராசி
அகிலசற் ஜனவிலாசி
கெடிமேவு மதுராபுரிக்குமுப காரிதமிழ்க்
கீர்த்தன னந்தநேசி

பாட்டு

படிமேவுபாசுரசே கரப்ரதாபசிங்காரி
பாலரெங்களையாதரி பரோபகாரி (சொக்)

## தர்க்கம்

ஷாஹைவாலா—என்றமெட்டு

சகிகள். வந்தனம் தந்தோம் மகராணி

அல். கல்யாண் கல்யாண் மந்திரிகளே

சகி. சந்ததம் உமது சொல்மறவோமே

அல். சகிமாரே மகிழ்வாக அமர்வீரே இதுவேளை

சகி. மங்கள மிலகிய மகராணி

அல். மந்திரிகளே மனமகிழ் வானேன்

சகி. சுந்தர ஜோபித சுகவேணி

அல். துணையாக எனதோடு அமர்வீரே சகிமாரே (வந்)

வ ம்:—மந்திரிகாள் நமது தர்பாரின் விசாரணை தொடங்குமுன் இஷ்ட தேவதையைப் பிரார்த்தனை செய்வது நமது மனோரதமல்லவா. சகலரும் அம்பிகா தோத்திரம் செய்யுங்கள்.

சகி. வ ம்.—அம்மணி உத்திரவின்படி காத்துக்கொண் டிருக்கிறோம்.

## எல்லோரும் பாடுதல்

ஆ சகிகாள்-என்ற மெட்டு

மீனாக்ஷியே அம்பா மீனாக்ஷியே
மின்னொளிர்மா தண்மதிசேர்
மெய்ப்பதம் போற்றினேன் கைத்தல மேயருள் (மீ)
தேனார்மதுராபுரி மகாராணியே
தேவிமனோன்மணியே புகழ் மேவும்தயாபரியே
ஞானானந்த சுகந்தானே யருள் செய்வாய்
நம்பினேன் சங்கர லிங்கக் கிருபாகர (மீனா)

அல். வ-ம்.—மகா மகத்துவமுற்றதும் நீர்வளம் நிலவளம் குடிவளம் பொருந்தியதும். பூலோக குபேரபுரி என்னும் பெயர் பூண்டதும் கைலாசபதியே சோமசுந்தரக் கடவுளாக அவதரித்து அறுபத்திநான்குதிருவிளையாடல் புரிந்ததும் தடாதகைப்பிராட்டியே மீனாக்ஷியாக அவதரித்து ஆறாயிரம் பாண்டியராஜர்கட்கும் அருமைக்கு மாரிஎனப் பெயர்வகித்து திக்குவிஜயஞ்செய்து திருமுடி புனைந்து செங்கோல் செலுத்தியதும், அமுதினு மினியதமிழ்க் கழகம் நிலவியதும், சைவம் என்னும் பயிர் தழைந்தோங்கப் பெற்றதும், சேர சோழமென்னும் தேசங்களில் சிறந்ததும் ஆகிய இத்தியாதி வைபவம் பொருந்திய இப்பாண்டிமண்டலத்தின் இராஜதானியாகிய இம் மதுரைமாநகருக் கரசிஎன்றும் அம்பிகையருளால், அல்லியிலையில் அவதரித்ததால் அல்லிநாயகி என்றும், பெயர்வகித்து அஞ்சுவயதிலெதிர்த்த நின்முகனை சங்கரித்து நீலிபட்டங்கட்டி, ஆண்வர்டை யாகாதென்று பொம்மை விருதுபூண்டு தருமச் செங்கோலைக் கரத்தேந்தி ஆறிலொரு கடமை கொண்டு அறநெறி வழுவாது அரசுசெலுத்தும் மகாராணியா மெனது மனதிற்கிசைந்த மந்திரிகாள் இன்று நமது தேச விசேஷங்களை விசாரிக்க எண்ணினேன் உங்கள் மனக்கருத்தென்ன.

செங். வ-ம்.—அம்மணி தடையில்லாமல் விசாரிக்கலாம்.

## அல்லி பாட்டு

மந்திரி பவளச்சேனா-என்ற மெட்டு

பவளச்சேனா மந்திரியே பகருவாயடி
நமதுநகர்தனில் வந்தபிரஜைகள்
சுமன முடனே வாழ்கின்றாரா (பவ)

அல். வ-ம்.—பவளச்சேனா! நமது பாண்டிமா நகரத்தில் வசிக்கும் பற்பல வர்னத்தவரான குடிஜனங்களின் க்ஷேமாதிசய மெப்படி.

மாதமூன்று மழை வருஷித்து நிலங்கள் விளைந்து ஜனங்கள் சந்தோஷமுற்றிருக்கின்றனரா. தடையின்றி விடைபகரவேண்டும்.

பவ. வ-ம்.—அம்மணி சகல ஜனமும் வருணனது கிருபையால் சந்தோஷமுற்றிருக்கின்றனர்.

## அல்லி பாட்டு

தேகத்தினில்வலி-என்ற மெட்டு

செங்கமலப்பெயர் கொண்டிலகும் வெகு
சேனைக்கதிபதி யானவளே
இங்கவர் சேதியை நன்குரைப்பாயடி
இன்பந்தந்திடுஞ் சேடியரே (செங்)

அல். வ-ம்.—செங்கமலம், நமது பாதுகாப்பிற் கமைக்கப்பட்ட குதிரைப்படை யானைப்படை சேனைப்படை காலாட் படைகளின் க்ஷேமமெப்படி. சரிவர யுத்தப்பயிற்சி நடக்கின்றதா.

செங். வ-ம்.—அம்மணி! நமது சேனை சைனியங்கள்யாவும் க்ஷேமமாயிருக்கின்றது. அது விஷயத்தில் தங்களுக்குக் கவலைவேண்டாம்.

## அல்லி பாட்டு

பொக்கிஷங் காக்கும்-என்ற மெட்டு

கஜானாதிகாரி காரிகையே கனகாம்புஜம்
காட்டும்வெள்ளி நாணயங்கள் நாட்டினில் சரியாய்
கனிவாய் முறையாய் இருக்கின்றதா
கழறுவீ ரதிவிரைவாய் (கஜா)

அல். வ-ம்.—கனகாம்புஜம். நமது பொக்கிஷப் பணநிலைமை எப்படி. பகுதிப்பணங்களின் வரவு செலவு சரியா யிருக்கின்றதா.

கன. வ-ம்.—தாயே எல்லாம் சரிவர இருக்கின்றது. அது விஷயத்தில் கவலை வேண்டாம்.

## அல்லி பாட்டு

ராயஸம் ரத்தினம்பாள்-என்ற மெட்டு

ரத்தினம்பாள்ராயஸம் நமதுமுத்திரைவைக்கும்
ஞாயமெதுவுமுண்டோ நவிலுவாய்விரைவினில் (ரத்)

அல். வ-ம்.—ரத்தினம்பாள். வர்த்தகர்களின் முத்திரை தஸ்தாவேஜ் இவைகள் சரியா யிருக்கின்றனவா. அன்றி கள்ளங்கபடு நடக்கின்றதா.

ரத். வ-ம்.—அம்மா! அப்படி யொன்றுமில்லை. வர்த்தகர்கள் தங்களாக்ஞா சக்கரத்திற் குட்பட்டு நடக்கின்றனர்.

## அல்லி பாட்டு

### தேவதேவாதிதேவா-என்ற மெட்டு

கோமளாங்கி கொத்தவால் கூறடி ஒன்று
கோரிநான் விசாரிக்கும் வழக்குண்டோ இன்று (கோ)

அல். வ-ம்.—அடிகோமளாங்கி நமது நியாயஸ்தலத்தில் இன்று நான் விசாரிக்கக்கூடிய வழக்குகள் யேதேனும் உண்டா.

கோம. வ-ம்.—அம்மணி விசேஷவழக்குகள் ஒன்றுமில்லை.

[குடிகள் உள்ளே சப்தமிடுகின்றனர்]

அல். வ-ம்.—தோழிகாள் அதென்ன நமது ஆராச்சிமணி அடிபடுவதுடன் ஆசாரவாசலில் ஜனங்களின் கூக்குரல் கேழ்க்கின்றது. என்னவிசேடம் போய்பார்த்து வாருங்கள்.

[செங்கமலம் உள்ளே சென்றுவந்து]

செங். வ-ம்.—அம்மணி குடிகள் வந்திருக்கின்றனர். பேட்டியையக்காண வேணுமாம்.

அல். வ-ம்.—அழைத்துவா. [குடிகள்வந்து முறையிடல்]

## பாட்டு

### கண்ணிகள்

ஐயையோ நாங்களும் என்ன செய்வோம்—எங்க
ளருமையானபயிர் போனதம்மா
மெய்யாகச் சொல்கின்றோம் பொய்யேயில்லை—இந்த
மேதினியாளும் மகாராணியே (ஐ)

காருவிரைகொண்டு இட்டபயிர்—அந்த
கருப்பன் பயிரெல்லாம் பாழாச்சுதே
ஊரிலிருக்கட்டுமா போகட்டுமா—ஒரு
உத்தாரம் தாரும் மகாராணியே (ஐ)

செம்பாவிரைகொண்டு நட்டபயிர்—அந்த
சேணி பயிரெல்லாம் பாழாச்சுதே
நம்பியிருந்தோமே வருட முழுவதும்
நாங்களென்ன செய்வோம் மகாராணியே (ஐ)

குடி. வ-ம்:—அம்மா! காட்டிலே வாழும் மிருகங்கள் காட்டிலே வந்து நாங்கள் போட்ட பயிரை எல்லாம் பாழாக்கிட்டதே. எப்படி

யம்மா வயிறு பொழைக்கிறது. இந்த மாசூல் கட்டமுடியா தம் மணி.

அல். வ-ம்.—குடிஜனங்காள். அப்படியா சமாசாரம்.

## அல்லி பாட்டு

### கோயல் சபுகாரமே-என்ற மெட்டு

பயப்பட வேண்டாமந்தக் காட்டில்
பாய்ந்திடு மிருகங்களை வாட்டி
வியப்புற வில்லதனை நீட்டி—வெகு
வேகமாக சரம் பூட்டி
அயர்ந்திடவே மிருக கோட்டி—சிர
மறுந்திடவே கணையால் மாட்டி
அதைரியத்தை வோட்டி
அரசைநிலை நாட்டி
ஆதரிப்பேனே பெரு மாட்டி (பயப்)

அல். வ-ம்.—நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் இவ்வருஷங் கட்டவேண்டிய தானியப்பகுதியை தள்ளிவிட்டதும் தவிர இந்தக்ஷணமே நான் கானகம் சென்று, வேட்டையாடி துஷ்ட மிருகங்களைக் கொன்று உங்கள் கஷ்டத்தை விலக்குகின்றேன். சந்தோஷமாகச் செல்லுங்கள். [குடிகள் போகின்றனர்]

[சேடிகாள் இப்போது நாம் வேட்டைக்குச் செல்ல வேண்டுமாகையால் அதற்குரிய]

## அல்லி பாட்டு

### வில்லம்பு கத்தி-என்ற மெட்டு

கத்திகட்டாரிவில் லம்புடனே
கைவாள் சூலமுடனே
கதை ரணஜதை மிகுபடை
காவலாள் கொண்டுவர சேனாதிபதி (கத்)

வளைதடி குண்டு சூலங்கள்
வஜ்ரா யுதமுடன் வேலம்புகள்
வருநாய் கருநாய்களும்
வருவித் ததிவிரைவாய்
வனவேட்டைக்கே போவோம்
போவோம் போவோம் போவோம் (கத்)

(சீன் முடிவு.)

---

சீன்—4. இடம்—காடு

நடிகர்:—அல்லி, தோழிகள், அர்ச்சுனன், கிருஷ்ணன்.

[கிருஷ்ணார்ச்சுனர் இருவரும் மறைவி
லிருந்து பார்க்கின்றனர்]

## அல்லி பாட்டு

### ஏதோ காட்டடா-என்ற மேட்டு

பல்லவி

வேட்டையாடுவோம் வனமிதில் (வேட்)

அநுபல்லவி

கூட்டமாகவருங் குள்ளநரிகரடி
வாட்டமடையவே தாட்டீகமாகநாம் (வேட்)

சரணம்

சிங்கம்புலிசிறுத்தை எருதுபன்றி
சேர்ந்துவருகுதிதோபார் எதிர்கன்றி
அக்கம்பதறஅடிப்பே னதையின்று
அடடா அடடா சரமதை
விடடா விடடா வனமிதில் (வேட்)

[அல்லி வுள்ளே தோழிகளுடன் மறைந்ததும்
கிருஷ்ணார்ச்சுனர் வெளிவந்து]

## அர்ஜுனன் பாட்டு

### இராகம் கல்யாணி.

பல்லவி

மாமாபார்த்தீரா அழகை மங்கைரூபத்தை (மா)

அநுபல்லவி

காமனேயும்விசித்ர சோமனேயும்ஙிகர்த்த
கன்னிகைதன்வுருவத்தை வுன்னிருகண்ணாலேநோக்கி (மா)

சரணம்

மாமா மாதுக்கிணையாமா
யாருண்டு சொல்லப்பூமா
ரதியே என்னலாமா

தாமா இவளைக்காண தவம்பெற்றனவேகண்கள்
ஆமாமிவளுக்கிணையாவா ரோமற்றப்பெண்கள் (மா)

வ-ம்:—மாமா! இம்மாதின் வனப்பை என்னவென்று சொல்வேன் இவளைப்போல் இவ்வுலகில் வேறு பெண்கள்நாயகம் வுண்டா?

கிரு. வ-ம்:—அர்ச்சுனு! அதெல்லாமிருக்கட்டும். உன்னிஷ்டம்போல் அவளைப் பார்த்தாய் விட்டதல்லவா?

## அர்ச்சுனன் பாட்டு

என்னலாவண்யமே-என்ற மெட்டு

பல்லவி

கண்டேன் கண்ணாரவே காந்தா மணியவளைக் (க)

அநுபல்லவி

கொண்டேன் மாமோகமையல் கூடி சுகிக்கவே (க)

சரணம்

செண்டு மலர்க்குஜங்கள் சேர்ந்தெழுந்த சுந்தரம்
சிந்தையில் நினைக்க சித்திசேருங் காமமந்திரம்
வண்டுகளடர்ந்த கொண்டை வாரியிட்ட தந்திரம்

மதனக்கலவிக்கேற்ற லேடி—எந்தன்
மனதுக்குகந்த சரிஜோடி—திரு
வதனவிழிகளோ கண்ணாடி

வாலிபக் கண்ணாட்டி வஜீகர சீமாட்டி
பாலியர்க்கு மேட்டி பசுந்துதருங் கிரீட்டி (கண்)

சித்திரப் பதுமையொத்த தேகமென்ன காக்ஷியே
சித்தர்கள் முத்தர்கள்போற்றும் தேவிரதி மாக்ஷியே
எத்திசை தனிலுமுண்டோ இவளுக்கிணை சாக்ஷியே

இங்கென்னை மயக்கவந்த ரூபம்—சென்னை
சங்கரலிங்கன் தமிழ்ச் சலாபம்—தேச
மங்கையர்க் கிவளே மணிதீபம்
மயிலை நிகர்மாது மனதுக்கிவள்தோது
குயிலெதிர் நில்லாது கோதையை யிப்போது (கண்)

அர். வ-ம்:—மாமா! இவ்வளவு பேரழகுடைய பெண்மணியைப் பார்க்கும் பாக்கியம் பலித்ததே. இது வன்றோ சிலாக்யம்.

கிரு. வ-ம்:—அர்ச்சுனு! பார்த்தாய் விட்டதல்லவா. இனி போவதற்குத் தடையில்லையே.

அர். வ-ம்:—மாமா! போவதற்குத் தடையொன்றுமில்லை. ஆனல் குறைவொன் றிருக்கின்றது.

கிரு. வ-ம்:— குறைவா. அதென்னகுறை.

அர். வ-ம்.—மாமா! பார்த்தாய் விட்டதல்லவா என்ற சொல்லுடன் அல்லியைச் சேர்த்தாய் விட்டதல்லவா என்ற சொல்லில்லாக் குறைதான்.

கிரு. வ-ம்:—பேஷ்! அர்ச்சுனா மெச்சினேன் உன் சமர்த்தை நானும் வேலையில்லாமல் உன்னுடன் தீர்த்தயாத்திரைக்கு வந்தேனே. சொல்லவேண்டும் என் பிழைப்பை.

அர். வ-ம்.—மாமா! என்னை மோசம் செய்யவேண்டாம். காட்டிக் கொடுத்த அல்லியைக் கூட்டிக் கொடுப்பது உமது கடமை.

கிரு. வ-ம்:—நல்லதப்பா. நல்லது. இவ்வித நடத்தை யுடையவனென்று எனக்கு முன்னமே தெரியும். அதிருக்கட்டும் அர்ச்சுனா! ஆதியில் நீ என்னிடங்கூறிய வார்த்தை என்ன. இப்பொழுது சொல்வதென்ன யோசித்துப் பார்.

அர். வ-ம்:—யோசிப்பதென்ன மாமா. அல்லியைத்தான் நேரில் பார்த்து விட்டேனே. நல்ல ரூபவதிதான். அவளை மணமுடிப்பதற்கு யோசனை எதற்கு மாமா.

### பாட்டு தர்க்கம்

மங்கையாள்—என்ற மெட்டு

அர்.
கன்னியாளல்லியை மணம செய்யாமல்
கண்ணனே நான்வர மாட்டேன்—வந்தால்
என்னுயிர் மீளவு மாட்டேன்—அவள்

காதலால் மனம் வாடுதே திரு
மாதவாக்ருபை தாருமே அந்த (கன்)

கிரு.
க்ஷேத்திர தீர்த்த யாத்திரைக்கே வந்து
சேரும்வினை செய்ய லாமா—இந்த
தீவினையும் விட்டுப் போமா—வுந்தன்

சேதிநானறிந் தேதடுத்தது
வாதடாதிஇ போதும்வாநகர் (க்ஷேத்)

அர்.
மாதவா எந்தன் மாதாபிதா குரு
மாமனும் தெய்வமும் நீயே—எனக்
காமனு பூதியும் நீயே—இந்த

வாது யேனந்த மாது அல்லியை
நானணைந்திட வேகிருபைப்புரி (மாத)

கிரு. தர்மனும் குந்திதேவியும் பீமனும்
தம்பி நகுல சகாதேவன்—மனம்
வெம்பிடுவாரே இது பாவம்—இந்த

சங்கதிநமக் கேதகாதது
இந்திரப்ரஸ்தம் செல்லுவோமிது (தர்)

வ-ம்:—அர்ச்சுனா! உலகமாயையி லகப்படாத ஒருவனைப் போல் இந்தப் பிடிவாதம் செய்வது நீதியல்ல. மேலும் உன்னோடு பழகுவது எனக்கு மானக்குறைவாயிருக்கிறது. தர்மண்ணா முதலானவர்கள் என்னை நிந்திப்பார்கள். தீர்த்தயாத்திரை செய்தது போதும் நீ உன் எண்ணம்போல் இங்கேயே சுற்றிக்கொண்டிரு எல்லா விஷயத்திற்கும் நீ துணிந்து விட்டாய். நானே ஸ்திரிலோலனென்று உலகத்தில் அபவாத மடைந்தேன் அப்பப்பா நீ எனக்கு மேலே போய்விட்டாய் நான்செல்கின்றேன்.

அர். த-ம்.—மாமா எனக்கிந்த பித்தேற்றிவைப்பதில் உமக்கு சந்தோஷமா. அல்லியின் திருமணச்சேதிதவிற மற்றெந்தவிஷயமும் என் செவியேற்காது. வேண்டுமானால் உமதுதிருவடிகளில் எனதுபிராணனைச் சேர்த்துக்கொள்ளும். (மறைவாக)

கிரு. வ-ம்.—எதுநம்மை விடமாட்டான்போலிருக்கிறது. ஒருகற்பனை கூறியனுப்புவோம்.

அர்ச்சுனா! நல்லது உன் னிஷ்டப்படியே செய்கிறேன். எழுந்திரு. இன்னும் சற்றுநேரத்தில் அதோ எதிர்தோன்றும் காட்டில்.

## கிருஷ்னன் பாட்டு

மருவேசேரித்தகுழலார்-என்றமெட்டு

அழகேமிகுந்த விஜயாமகிழ்ந்து அகமேதுணிந்து வனமீது
அதிவீரமொடு சகிமாருடனே வருவாள்விலங்கை வதையாடை

சிறுமீதொடுக்கும் கணையேஎடுத்து செயலோடடுத்து அருகாகி
திறமாரவளின் விரல்மோதிரத்தை திடமாஎடுத்து வருவாயே

வ-ம்:—அர்ச்சுனா! அல்லிவேட்டையாடும்போது தோழிகளுடன்கலந்து அவளது அஸ்திரங்களைப் பொருக்கிக் கொடுத்து அவளைமயக்கி அவளறியாதபடி கைக்கணையாழியைக் கொண்டுவரவேண்டும். வந்தால்தான் அவளை உனக்கு விவாகம் செய்துகொடுப்பேன், ஆனதால்,

## கிருஷ்ணன் பாட்டு

சென்றுவாநீ-என்ற மெட்டு

பல்லவி

கொண்டுவாநீ கொண்டுவாநீ அந்த
கோதையாளாம் அல்லி மோதிரத்தைக் (கொ)

வ-ம்.—அர்ச்சுனா! நான் தெரிவித்தபடி சென்று அவள் விரலிலணிந்துள்ள அக்கணையாழியைக் கொண்டு அவளிஷ்டப்படி

அநுபல்லவி

பெண்டுகளைப் போல பேசிநடித்து
கண்டவளின் கரங் கால்பிடித்து (கொ)

வ-ம்.—அர்ச்சுனா! அவளிடம் எவ்விதம் செல்லவேண்டும் தெரியுமா.

சரணம்

கானக வேடுவர் கூடக்கலந்து
கன்னியவள் தோழி போலிருந்து (கொ)

[இருவரும் உட்செல் கின்றனர். அர்ச்சுனன் பெண் வேடத்துடன் அல்லியுடன் வருகின்றான்]

## அல்லி பாட்டு

புள்ளிமான்—என்ற மெட்டு

பல்லவி

துள்ளி மான் ஓடுது தோழியேப்பாரடி
துணையாய் வந்து கணையால் கொன்று
முனமாய் நின்று வந்திடு வீரடி (து)

அநுபல்லவி

தாவுது பாரடி தாதியே ஒருகரடி
சரியாய் சென்று எதிராய் நின்று
கணையால் வென்று வந்திடு வீரடி (து)

அல். வ-ம்.—தோழிகாள்! கொடிய கானகத்தில் வெய்யலின் கடுமையில் மலைக்குகைகளில் நுழைந்து துஷ்ட மிருகங்களைக் கொன்று வீரத்துடன் வேட்டையாடியதால் என்தேகங் களைத்ததுமன்றி மனமயக்க மேலிட்டு தாகமெடுக்கின்றதே, ஐயோ என்செய்வேன்.

[மற்றதோழிகளுட்செல்ல அர்ச்சுனன் தனியாக அல்லியுடன் நிற்கின்றான்]

## அல்லி பாட்டு

களையுமானதே சகி
களையுமானதே சகி
களையைத்தீர்க்க ஜலங்கொணர்வாய் (களை)

சளையுதடி எந்தன்மனம்
தாகவிடா யாகிமுனம்
தயங்குதே க்ஷணம் சகி
தண்ணீர்கொஞ்சங் கொண்டுவாடி (களை)

அர். வ-ம்.—அம்மணி நாம் சிரமத்துடன் வேட்டையாடினோம். களையிருக்கத்தான் செய்யும். இதோ ஜலங்கொண்டு வருகின்றேன், தாகந் தணியுங்கள்.

[அர்ச்சுனன் உட்சென்று ஜலங்கொண்டு வந்து தர அல்லி தாகசாந்தி செய்து]

## அல்லி பாட்டு

காலைக் கொஞ்சம் பிடியடி கதையு மொன்று சொல்லடி
கவலை தீரடி சகி
கானகத்தில் வேட்டையாடக் (களை)

அல். வ-ம்.—சகி என்னருகில் சற்றமர்ந்து என் களைதீரக் காலைப்பிடி இதோ இந்த ஆலமரத்தடியில் சயனிக்கின்றேன்.

[அருச்சுனன் மடிமீதுபடுத்து]

அல். வ-ம்.—சகி யேதாவதொரு கதைசொல் கேட்போம்.

அர். வ-ம்.—அம்மணி! நடந்தகதையைச் சொல்லவா. இனிமேல் நடக்கப்போகிற கதையைச் சொல்லவா அல்லது என்கதையைச் சொல்லவா.

அல். வ-ம்.—உனக்கெது இஷ்டமோ அதை சொல்லடி.

[அர்ச்சுனன் அல்லியின் கால்களைப் பிடித்துக் கொண்டு]

## அர்ச்சுனன் பாட்டு

சிந்து

பாண்டிநாடாளப் பிறந்த நல்ல
பாராசர்போற்றவந்த அல்லிராணியே
ஆண்டருள் அஸ்தினபுரி தனிலே
அரசாக்ஷிசெய்யும்சந்த்ர குலத்தவராம்

இந்திரப்பிரஸ்த நகராய் தன்னில்
எதிரற்ற அண்ணன்தம்பிமார்கள் ஐவராம்
பாண்டுமஹாராஜன் பாலராம் அந்தப்
பாங்கான குந்தியம்மன் பெற்றமைந்தராம்
தர்மன்பீம னர்ச்சுனனும் நேரிளைய
தம்பியாம் நகுல சகாதேவனும்
ஐவரில் அர்ச்சுனனும் அவன்
ஆருக்குமடங்காதப் போர்வீரனும்
காண்டீப னென்னுங்காளையாம் அந்த
காரிகைதுரோபதையை மாலை செய்தவன்
ஆடவரில் சிறந்தவன் அவன்
ஐந்துவேதங்களையும் ஆய்ந்துபார்த்தவன்
பேரில்மிகுந்த அழகன் அல்லி
பேருக்குகந்தராஜன் அர்ச்சுனனென்பான்
மனதிற்கிசைந்தக் கணவன் உன்னை
மாலைமுடிக்கவந்த வாலிபனம்மா (பா)

அல். வ-ம்.—அடே சண்டாளா அப்படியா சமாசாரம் அல்லியினது வீர தீரந் தெரிந்திருந்தும் அருகில் வந்துவிட்டாயல்லவா.

[அல்லிதுரத்த அர்ச்சுனன் ஓடி மறைதல்]

[தோழிகள் உள்ளிருந்து வெளிவந்து]

கன. வ ம்.—அம்மணி என்ன சமாசாரம். எதற்காக இவ்வித கோபத்துடன் நிற்கின்றீர்கள்.

அல். வ.ம்.—பாங்கிகாள் நீங்களெல்லோரும் இன்னேரம் எங்குசென்றிருந்தீர்கள் இங்கே நடந்த விஷயம் தெரியுமா வுங்களுக்கு.

## அல்லி பாட்டு

### கேளடிசெங்கமலம்—என்ற மெட்டு

பாங்கியே செங்கமலம் இங்குவா
பகருவே னனகோலம் ஒரு
பாதகனனவன் வோடியே எந்தன்பின்
பற்றிவந்த சபலம் (பா)

ஆணைப் பிறந்தவண்டி அவனதி
ஆங்கார முள்ளவண்டி
அஞ்சாமல் நெஞ்சந்துணிந்து வந்தவனை
அண்டி வதையுங்கடி (பா)

காலைப் பிடித்தாண்டி கேடான
கதையைப் படித்தாண்டி அந்தக்

காதகனுனவ னெங்குசென்றுலுமே
கண்டு பிடியுங்கடி (பா)

அல். வ-ம்.—செங்கமலம். சீக்கிரமாகச் சென்று அவனைத் தேடிப் பிடித்து வாருங்கள்.

செங். வ-ம்.—அம்மா! தங்களிடமாவது ஆண்பிள்ளை வருவதாவது. அப்படி யிராதம்மணி. நித்திரை மயக்கத்தில் கனவுகண்டிருக்கலாம்.

அல். வ-ம்.—என்னடியது. கனவென்றால் நான் உணர்வற்று யிருக்கிறேன். சீ. சீ. வாயாடாது வந்தவனை தேடிப்பிடித்து வாருங்கள். [செல்கின்றாள்]

(சீன் முடிவு.)

---

சீன்—5. இடம்—முன்காடு.

நடிகர்:—கிருஷ்ணன், அருச்சுனன்.

[அருச்சுனன் தேகமிளைக்க ஓடிவந்து நிற்கின்றான்.]

கிரு. வ-ம்.—அர்ச்சுனு! என் என்னகாரணம். எதற்காக இப்படிவோடி வந்தாய். அல்லியைக்கண்டாயா நல்லவெகுமதி கொடுத்தாளா. பயப்படாதே, விவரமாகச்சொல்.

## அர்ச்சுனன் பாட்டு

கல்யாணம்—என்ற மெட்டு

பல்லவி

காந்தர்வக்கல்யாணமே செய்துவையுமே (கா)

அநுபல்லவி

ஆந்துணையாமல்லிக்கம்பு பொறுக்கினேன்
அவளின்களைதெரியஜலங் கொண்டுகொடுத்தேன்
பாந்தவராமைவர் கதையும்படித்தேன்
பாவையவள்கோபங்கொள்ள ஓடியேவந்தேன் (கா)

வ-ம்:—மாமா! போதும் என்னமோசபலம் உன் அனுமதிப்படிதானே சென்றிருந்தேன் அநேகமாய் முற்றிலும் அநுகூலம்தான் நீ அறியாத தொன்றுமில்லை மோதிரமுங் கொண்டு வந்தேன் மாமா! கல்யாணம்.

இரு. வ-ம்.—கல்யாணந்தான். அதிருக்கட்டும். அங்கு நடந்ததை விவரமாகச் சொல் கேட்போம்.

அர். வ-ம்.—மாமா பெண்வீரர்களுடன் கலந்து வேட்டையாடையி லவள்பக்க மடுத்து அவள் மெச்சும்படி வேண்டிய வுதவிகள் செய்தேன், அரசி மிகவும் சந்தோஷித்து என்னைத் துணையாகக் கொண்டு களைத்பாற்றிக் கொள்ள என் மடிமேல் சயனித்துக் கொண்டு கதைசொல்லக் கேட்டாள். எனக்கந்த சமயம் அவளு டைய தேககாந்தியை நன்று யுற்றுப்பார்க்கவும் கைகால்களைத் தொட்டு உபசரிக்கவும் போதுமானகாலம் கிடைத்திருந்தது. என்மனம் எங்கேயோ ஆழ்ந்து அழுந்திபோயிருந்தது. என்வாய் மதத்தால் முற்றிலும் மனம்போல முடித்துக் கொள்ளாமல் தற் புகழ்ச்சியாய் அந்தக் கதையின் மத்தியில் என் பிரதாபத்தை விசேஷமாக எடுத்து புகழ்ந்து பேசிவிட்டேன் மலர்மாலைபோல அசைவற்று மடியில் படுத்திருந்தவள் களைமாறி சீறி சர்ப்பம் போல என்னைக் காய்ந்து கடுமொழிகள் கூறி என் கபடத்தைக் கண்டுகொண்டு தன் பரிவாரங்களை உதவிக் கழைத்தாள். நான் இனித் தாமதிப்பது தகாதென்று தயங்கித் தயங்கிப் பார்த்துக் கொண்டே ஓடிவந்து விட்டேன். எப்படியாவது உனது வார்த் தையின்படி மோதிரத்தைக் கொண்டுவந்து விட்டேனல்லவா. ஆதலால். மாமா,

## அர்ஜுனன் பாட்டு

ஆண்டிப்பண்டாரம்-என்ற மெட்டு

கண்ணபிரானே கல்யாணம் செய்வாயே—கமலக் (கண்)

எண்ணியல்லி மாதுதன்னால் யேங்கித் தவிக்கின்றேனே
இன்னமும் நீ ஜாலம்செய்ய யேற்குமோ என் மாயவனே (கண்)

காட்டிக்கொடுத்த அல்லி காமலாகிரி தணியக்
கூட்டிக் கொடுப்பாயானால் கோடி நமஸ்காரம் செய்வேன் (கண்)

மங்கையர்ந்த அல்லிதனை மாலையிட்டு மருவாமலே
தங்களது சாக்ஷியாய் தருமர்பதி-நான் வருகேன் (கண்)

கிரு. வ-ம்:—அருச்சுனா! இதென்ன இவ்விதம் பித்தனைப்போல் பினத்துகின்றாய். தீர்த்தயாத்திரை செய்தபலன் போதுமானது. இந்திரப் பிரஸ்தம் போவோம் வா.

அர். வ-ம்.—மாமா! உன் திருவடிகளை விடமாட்டேன் அல்லியின் திரு மணச்சேதி தவிற மற்றெதுவும் என் செவியேற்காது. வேண்டு மானால் உன் பாதத்தில் என்பிராணனை சேர்த்துக்கொள்.

கிரு. வ-ம்:—(தனியாக) இதென்ன சங்கடமாய் முடிந்தது. நல்லது ஒருயுக்தி கூறி யனுப்புவோம். (வெளிப்படையாக)

அர்ச்சுனு! எழுந்திரு. நீ பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று சாதிக்கின்ருப். அர்ச்சுனு கற்சமயம் நான்.

## அர்ஜுனன் பாட்டு

பாலராம னயனே-என்ற மேட்டு

பல்லவி

விடாயானேன் மைத்துனு தாக (விடா)

அநுபல்லவி

கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்தால்
புண்ணிய முனக்கு (விடா)

சரணம்

சோகமாகிமனம் சோருதே கண்களும்
சொக்குதே நாவும் வறளுதே நெஞ்சமும்
வேகமுடன் ஜலங் கொண்டுவந்தா யாகில்
மெல்லியை யுனக்குக் கல்யாணம் செய்குவேன் (விடா)

கிரு. வ-ம்:—அர்ச்சுனு! மிகவும் தாகமாக இருக்கின்றது. கொஞ்சம் ஜலம் கொண்டுவா தாகசாந்தி செய்துகொண்டு பிறகு வுன் வேலையைக் கவனிக்கின்றேன்.

அர். வ-ம்.—மாமா! நான் மோகவிடாயால் வாடியிருக்கும் சமயம் தாம் தாகவிடாயான தென்பதும் விந்தைதான், ஆயினும் பெரிதல்ல.

ஷை மெட்டு

வேகமாய்சென்றுவாரேன் தாக
விடாய்தீரத்தண்ணீர் தாகத்தைநாடி (வே)

ஆகமிளைக்காதீர் அன்புள்ளமாமனே
அல்லிநாயகியாவல் தீர்க்கும்பூமனே
தேகம்சோராமுன்னம் ஸ்ரீபரந்தாமனே
தேடிச்சோலைகண்டு நாடிச்சலங்கொண்டு (வே)

[போகின்ருன்]

கிரு. வ-ம்:—இந்தசமயம் இவனை சற்று அலையவிட வேண்டும். அல்லியின் உருவப்படமொன்று எழுதி குளக்கரை மரத்தில் கட்டிவிட்டுப் பார்க்கலாம் ஒரு வேடிக்கை [போகின்ருன்]

(சீன் முடிவு.)

---

சீன்—6. இடம்—குளம்.

நடிகர்:—அர்ச்சுனன்.

[அர்ச்சுனன் குளத்தின் ஜலத்தை உற்றுப் பார்த்து அல்லியின் உருவத்தை கண்டு பேசுவது]

அர். வ-ம்:—ஆ! இதென்னவிந்தை நாம் தேடிவந்த அரும்பொருள் ஆருயிர்க்காதலி, அருந்தவப்பேறு, அன்பைக்கொழிக்கு மேகம், அங்கஜனுக் சருந்துணே, அழகுக்கணிகலம், அம்புஜவாவி, அரிவையர்க்கரசி, அஞ்சுகமொழியாள், அஞ்சனவிழியாள், கைப்பிடியிடையாள், மதப்பிடி நடையாள், கருநாகச்சடையாள், செங்கதலித் தொடையாள், என்னல்லி, எனது பிராணவல்லி. இதோ இதோ வாவியிற் காண்கின்ருள்; இதென்ன மலரோன் செய்யுங் கூத்தோ, அல்லது மாரன்செய்யும் ஜாலவித்தையோ, எப்படி இங்கு வந்தாள் என்னைத் தேடிவந்தாளோ.

## அர்ச்சுனன் பாட்டு

பிலஹரி—ரூபகம் கண்ணிகள்

தண்ணீரிலேயிருக்கதையலே காரணமேன் அல்லியே
வெகு-தயவாஎன்னுடன்வந்து திருவாய்முத்தந்தருவாய் மெல்லியே

உன்னுசையாலேமனம் உருகித்தவிக்கின்றேனே அல்லியே
இங்கு-ஓடிவந்தென்னைக்கூடி மோடிலீலைபுரிவாய் மெல்லியே

சம்போகமாமதன சரசாஞ்சிததேக வல்லியே
இந்த-ஜலத்தில்தங்கியிருக்குங் கருத்தையுரைப்பாயடி மெல்லியே

அர். வ-ம்.—ஆ! அல்லி சிக்கிக்கொண்டாள் இனி விடமாட்டேன். அடி பெண்ணமுதே வேண்டாம் மறுக்காதே கரையிலேறு கண்ணெடுத்துப்பார். கந்தர்ப்பனிலும் மகா ரூபம்பொருந்தின நான் கால்கள்நோகத் தேடித்தேடிக் கமலவாவியின் கரையில்வந்து காத்திருக்கின்றேன் கண்மணியே கரையேறிவா.

## அர்ஜுனன் பாட்டு

மதியோ இவள்ரதியோ-என்ற மெட்டு

கண்ணிகள்

வருவாய்எனைமருவாய்வன மயிலேகுயிலேமதியேரதியே
திருவாயிதழ்தருவாய்மனந் தியங்கிதயங்கிமயங்குறேனடி (வ)

குளத்தில்தனித்திருக்கஎன்ன குறையோமுறையோஅடிஎன்சகியே
ஜலத்தின்கரையடுத்துநல்ல சரவமதனசுகமேதருக (வ)

மானேஇங்குநானேதிரு மனமுமிளகிஉருகுறேனடி
தேனேஜர்லமேனேவெகு தென்புடனெந்தனை சேர்ந்தணைந்திடவே (வ)

வ-ம்:—காதலி ஏனிந்தஜாலம் செய்கின்ருய். நீ இந்தக் குளத்திலிருப்பது பெரிதல்ல கடலில் மூழ்கி இருந்தாலும் ஒரு கணையினுல் கடலை வற்றச்செய்து உன்னை யடைவேன். மாதரசே சப்த சாகரஞ் சூழ்ந்த இப் பெரிய பூமியில் நீ எங்குசென்று மறைந்தாலும் உன்னைத் தேடிப்பிடிக்கும் சக்தி எனக்குண்டு. இதோ உன்னை பிடித் தணைக்கிறேன் பார்.

[குளத்தில் குதித் தெழுந்து]

இதேதோ கபடமாகத்தெரிகின்றது. நாமிங்கு வீணில் காலங்கழிப்பது நன்றல்ல கண்ணபிரான் தாகத்தால் வாடியிருப்பார் சீக்கிரம் ஜலங் கொண்டு செல்வோம். [போகிருன்]

(சீன் முடிவு)

---

சீன்—7. இடம்—காடு.

நடிகர்:—அர்ச்சுனன், கிருஷ்ணன்.

[ஜலங்கொண்டுவந்த அர்ச்சுனனிடம், கிருஷ்ணன் பேசுதல்]

கி-ரு. வ-ம்.—அர்ச்சுனு! யேது இவ்வளவு சீக்கிரம் ஜலங்கொண்டு வந்தாய். தாகாவஸ்தை தானுகக் குறைந்தபிறகு தெரிந்தே வந்துவிட்டாய் நீ சமயஸஞ்சீவி.

அர். வ-ம்.—சமீபத்தில் நதி குளம் சுனையொன்று மில்லை. வெகுதூரம் சென்று கொண்டு வந்தேன்.

கிரு. வ-ம்.—நீ நல்ல ஞாபகத்துடன் சென்றிருந்தால் சீக்கிரம் வந்திருக்கக்கூடும். உன்மேல் குற்றமில்லை எதைப் பார்த்தாயோ ஏங்கித் தவித்தாயோ வெட்கப் படாதே சொல்.

அர் வ-ம்.—மாமா! உனக்கொளித்து சொல்லக்கூடுமோ குளக் கரையில் அல்லியைக் கண்டேன். ஜலத்தில் மறைந்துகொண்டு என்னை மோசம்செய்தாள். பலமுறை யழைத்தேன் மன்ருடினேன் முடிவுவரையுந் தோன்றிமறைந்து மோசம் செய்தாள். புத்தி மோசம் போய் நின்று விட்டேன். மாமா! நீ வுன்தாகத்தைத் தீர்த்துக் கொண்டாய் என் மோகத்தை தீர்க்கவில்லையே மைத்துனு ஏனிந்த ஜாலம் செய்கின்ருய்.

கிரு. வ-ம்.—அர்ச்சுனு! என்ன சொன்னுய் நானுவுன் மோகத்தைத் தீர்க்கவேண்டும். அடேபற்குனு! உனது காமப்பெருக்கால் என்

னைப் பெண்ணென்று நினைத்துக் கொண்டாயோ. பேஷ்! நல்ல கெட்டிக்காரன்தான் இனி கட்டி முத்தமிடவந்தாலும் வருவாய்.

அர். வ-ம்.—மாமா! யேதோ என் வாய்தவரி சொல்லி விட்டேன் அதிருக்கட்டும் நீர் எவ்விதம்பேசி மாயாஜாலங்களினால் மறைக்கப் பார்த்தாலும்.

## தர்க்கம்

சல்லாப லீலைசெய்வோம்—என்ற மெட்டு

அர். மாதாசைநான்மறவேன் மாமாவேஅல்லி

கிரு. தீதாகுமேயதனால் சிலைவிஜயா

அர். காதலுமீறி சன்னியைக்கோரி
வேதனையாகுதையா விரகமையல் வேதனையாகுதையா

கிரு. வாதுசெய்யாதே வருவாயிப்போதே
பாதகமாகுமிதே பற்குனவெகு பாதகமாகுமிதே

அர். அல்லியைக்கூடாவிடி லன்னமருந்தேனே

கிரு. சொல்லிதைக்கேட்டால் வெகுதுயர்வருந்தானே

அர். நல்லகுண மானே

கிரு. சொல்லடா விகாதனே

அர். பாதநமஸ் காரமே

கிரு. ஏதுசவிஸ் தாரமே

அர். தாளேன் மோகம்

கிரு. கேளேன் சோகம்

அர். மைத்துனா

கிரு. பற்குனா

அர். மங்கையை மணஞ்செய்தால் மலரடிக் காளாகுவேன்

கிரு. சங்கதி சொல்லவேண்டாம் தனியாய் நகர்க்கேகுவேன்

அர். சங்கரலிங்கன் தமிழ் சங்கீதானந்தா (மா)

கிரு. வ-ம்.—அர்ச்சுனா இதென்ன இவ்விதம் வாதுசெய்கின்றாய். சீ. சீ. இதுனக்குத் தகாது. செல்வோம் வா.

அர். வ-ம்.—மாமா! வேண்டாம். கபடநாடக சூஸ்திரம் செய்யாதே. என்னை காமபாதையால் கொல்லப் பார்க்காதே. நானோ பித்தன் தயவு செய்யவேண்டும்.

[கிருஷ்ணன் நித்திரை வருபவன்போ லபிநயித்து அர்ச்சுனன்மேல் விழுகின்றான்]

அர். வ-ம்.—இதென்னமாமா.

## கிருஷ்ணன் பாட்டு

பூவருந்திருவே-என்ற மெட்டு

சோகமானதடா எந்தன்
தேசம் நோகுதடா நல்ல
தூக்கமேவர யேக்கமேலிட
நீக்கவே யிதை நோக்கு மென்விழி
படுத்துரங்கிடவே களைப்
பது தணிந்திடவே அடா
பார்த்தனே மலர் பூர்த்த வனத்தில்
நேர்த்தியாக நித்திரை புரிந்துநான்
வருவே னுன்னுடனே மணம்
புரிவேன் மன்னவனே கொண்ட
மயக்க மேலிட்டு தயக்கமே தொட்டு
தியக்க மின்றியே நியக்கமாயிரு (சோ)

கிரு. வ-ம்.—ஆர்ச்சுனு! மகா சபலனுகிய உன்னுடைய பழக்கத்தால் என்னறிவு கலங்கி யிருக்கக்கூடும். நிஜமாக எனக்கு நித்திரை வருகிறது. கொஞ்சநேரம் படுத்துக் கொள்ளுகிறேன், உட்கார். உன் மடியில் தலையை வைத்துக்கொண்டு படுக்கின்றேன். பிறகு உன் காரியத்தைக் கவனிக்கின்றேன், யோசிக்காதே,

அர். வ-ம்:—நல்லது உன்னிஷ்டப்படி நடக்கின்றேன், எனக்கு நித்திரை வராது.

[அருச்சுனன் மடியில் கிருஷ்ணன் சயனித்த பின்]

அர். வ-ம்.—மாமா. மாமா. உங் இதேது பலனில்லை. துடை வலிக்கின்றது. நல்லது இவரை எதிர்பார்த்தால் நமது காரியம் முடியாது. ஆனதால் இவர் தூக்கம் தெளிந் தெழுந்திருக்குமுன் நாம் முன்சென்ற குளக்கரை சென்று அல்லியைப்பார்த்து வருவோம் ஆம். இதுதான் நல்ல யோசனை. இதோ எதிர்.

## அர்ஜுனன் பாட்டு

தக்கப் பாராங்கல்லை-என்ற மெட்டு

**கண்ணிகள்**

தோணும் பாராங்கல்லை எடுத்து இவர்
தூங்கத் தலையணை கொடுத்து இன்று
நானும் செல்வேன் நகரடுத்து அந்த
நங்கை யல்லிமோகம் பிடித்து (தோ)

தூங்கி யிருப்பதி ஞலே அவர்
தூக்கங் கலையு முன்னலே என்னைத்
தாங்கிய மையலி ஞலே அல்லி
தன்னைத் தேடிப்போவேன் மேலே (தோ)

[போகின்றுன் கிருஷ்ணனெழுந்து]

## கிருஷ்ணன் பாட்டு

இராகம்-பைரவி, தாளம்-ரூபகம்.

கல்லைதலைக்குவைத்துப் போரான் பாராங்
கல்லைதலைக்குவைத்துப் போரான்
கானகம்தனிலே சென்று
கானக்குறத்திபோல் நின்று
காண தோண போறேன் நானே (கல்)

கிரு. வ-ம்.—நல்ல காரியம் செய்து சென்றுன். சபாஷ்! அந்த ஒப் பற்ற பேய்க் காமக்கோட்டி யல்லவா இவனுக்கு இவ்வளவு துணிவை யுண்டுபண்ணி விட்டது. இதற்கு பதில் இவனைக் கொஞ்சம் வேடிக்கைசெய்து விடவேண்டும். அடே திருட்டுப் பயலே இந்த கோபாலனுடைய குணங்கள் தெரிந்திருந்தும வஞ் சகமாகச் சென்றுயல்லவா. அந்தமட்டும் கல்லைத் தலையில் போட்டு விடாமல் சென்றுயே அது ஒரு பெரிய காரியந்தான். இப்போதே குறத்திவேடம் பூண்டு தக்க யேற்பாடுகள் செய் கின்றேன். [போகின்றுன்]

(சீன் முடிவு.)

---

## சீன்—8. இடம்—மலைச்சாரல்.

நடிகர்.—குறத்தி, அருச்சுனன்.

## குறத்தி பாட்டு

சுந்தரமாய் சுகிர்தகுற வஞ்சிவந்தாளே (சுந்)

செந்தாமறை முகமும் திலதம் தளதளென்ன
கந்தகளபம் பூசிகன்னி ஒயிலாய் கைவீசி (சுந்)

செவியிலோ லைஜிமிக்கி சிங்கார மாகபேசி
அவனி யோரைமயக்கி அன்பாய் கைகளைவீசி (சுந்)

சரிகை சேலையிடையாள் சாய்ந்த அன்னநடையாள்
வரிசை மிகவுடையாள் வந்தாள் கானகத்திலே (சுந்)

அர். வ-ம்:—இதோ இவ்வழியாக வருகிறபெண்ணைப் பார்த்தால் குற த்திப்போலக்காணப்படுகின்றன. இந்த ஜாதிஜனங்களுக்கு மனி

தர்களின் மனக்குறிப்பையறிந்து சொல்கிற திறமையுண்டென்பார்கள். இவளை விசாரிப்போம்.

## தர்க்கம்

நாரதரே அம்மாதவள்—என்ற மெட்டு

அர். மாரதிமாது போலேஇப்போது
மாவனமீது வந்ததேனோது

குற. குறிகளுரைக்கும் குறத்தியும்நானே
கூடைமுறங்கட்ட ஓடிவந்தேனே

அர். குறத்திநீயானல் கரத்தினைப்பார்த்து
குறியுரைப்பாயோ தெரியச்சொல்வாயே

வ.ம்:—ஐயே! கும்பிடுகிறேன். நாங்க இந்தப்பொதியமலையடிவாரத்தே ஈக்கிரவங்க. குரச்சாரிதான்.

அர். வ.ம்.—ஆனல் உன்னுடைய நாடேது.

## குறத்தி பாட்டு

குறவஞ்சி மெட்டு

கண்ணிகள்

என்னுடைய வளநாடு இந்திரனுர் நாடு
இமயகிரி மலையோரம் இருப்பதெங்கள் நாடு
அகஸ்தியனுர் வாழுமலை யானதெங்கள் நாடு
அம்மன்வள்ளி வேள்விமலை யாகுமெங்கள் நாடு
பவளமலை பச்சைமலை பகருமெங்கள் நாடு
பரமசிவன் வாழுமலை பாருமெங்கள் நாடு
வங்காள மலையாளம் வாழுமெங்கள் நாடு
வளமிகுந்த தேசமெல்லாம் வசிப்போமெங்கள் நாடு

அர். வ ம்:—நல்லது. குறியுரைப்பேனென்றுயே, என்மனக்குறிப்பையறிந்து சொல்லமுடியுமா.

குற. வ.ம்.—வண்டாய்யே, இத்தானு பெரிசு. அப்படியே சொல்ரேன் கேள்ராய்யே. ஐயே எம்மேலே மலையாண்டி வருவான். பயப்படாம யிருந்து கேள்ராய்யே.

## குறத்தி பாட்டு

குறவஞ்சி மெட்டு

கண்ணிகள்

அஸ்தினு புரத்தையாளும் அரசர்மைந்தர் நீங்கள்
அந்தஇந்த்ர பிரஸ்தம்வாழும் தருமர்தம்பி நீதான்

பீமனுக்கு நேரிளைய அர்ச்சுனனும் நீதான்
பேசுங்கண்ணனோடுதீர்த்த யாத்திரைக்கு வந்தாய்
மாமதுரை யாளுமந்த மாது அல்லி மோகம்
வாட்டுதடா வுந்தனையே வதுவைசெய்யத் தம்பி
தீர்த்தயாத்தி ரைக்குவந்த சிலேவிஜயா நானும்
தெரிவித்தது வுண்மைதானே செப்புவாயே தம்பி

வ-ம்:—எண்டாய்யே! சொன்னதெல்லாம் சரியாயிக்கா சாமி பொய் சொல்லாதுடா ஐயே.

அர். வ-ம்:—நீ சொல்லிவந்ததெல்லாம் சரிதான். அந்த அல்லியின் மேல் ஆசைகொண் டிருக்கிறேனென்றுயே அவள் எனக்குக் கிடைப்பாளா.

குற. வ-ம்.—அடே ஐயே! நான் சொல்றதைக்கேளு. நானு மூணு மாத்திரைதாரேன் அதைக் கொண்டுபோய் அல்லியின் திருக் குளத்து ஜலத்தில் உரைத்தால் உடனே அந்த அல்லி உன்னை விவாகம் செய்துகொள்வாள்.

அர். வ-ம்:—ஆனலந்த மருந்தைச்கொடு.

குற. வ-ம்:—சும்மாகொடுத்தால் பலிதமாகாது துட்டு கொடுக்க வேண்டும்.

அர். வ-ம்:—ஏ குறத்தி! நான் யாத்திரைக்கு வந்தவன்என்னிடத்தில் துட்டேது.

குற. வ-ம்:—ஆனல்! உன்னுடைய ஆடையாபரணங்களைக் கொடு.

## தர்க்கம்

அப்படியானல்-என்ற மெட்டு

அர். வார்த்தையுண்மையானலம் மருந்தையென்கைதா
குற. மன்னனேவுன்னுடையைக் கழட்டிக்கையில்தா
அர். மருந்தது பலித்திடாவிட்டால் நானென்செய்வது
குற. வாங்கியவுந்தனுடமை ஏனெனக்கிது
அர். எங்கிருப்பதுந்தன் வீடு இயம்புவாய்மாதே
குற. இந்தநாலுமலைக்குள்ளே நானிருப்பது
அர். அங்குவந்துவுன்னைநா னறிவதெப்படி
குற. அங்கிருக்கும்எழுகுடி சையுமென்னது
அர். வந்துவுன்னைநானழைக்கும் வார்த்தைதானுமெப்படி
குற. வஞ்சியேராமக்காவென்றால் நான்வருவனே

[ராமக்கா, லட்சுமக்கா, பொம்மக்கா, திம்மக்காவென்று குதிக்கின்றாள்.]

அர். வ-ம்—திம்மக்காவென்று குதிக்கவேண்டுமா.

குற. வ-ம்.—ஆம்.

அர். வ-ம்.—நல்லது இந்த மருந்தை எப்படி வுரைப்பது

குற. வ-ம்.—குளத்தின் கரையில் உட்கார்ந்துகொண்டு ஜலம்விட்டு அல்லி மெல்லி அல்லிமெல்லி என்று உரைக்க வேண்டும்.

அர். வ-ம்—நல்லது நான் சென்று வருகிறேன்.

[இருவரும் போகின்றனர்.]

(ஸீன் முடிவு.)

---

சீன்—9. இடம் தாமரைக்குளம்

நடிகர்—அர்ச்சுனன், அல்லியின் தோழிகள்.

தந்தானமடி-என்ற மேட்டு

தர்க்கம்

அர். மருந்துரைக்கிறேன் மருந்துரைக்கிறேன்
வசியம்செய்திடவே அந்த
மாயக்குறத்திவாய்முகூர்த்தம் நானறிந்திடவே (ம)

அல்லியரசாணி அல்லியரசாணி
அழகுள்ளராணி என்
ஆசைதீர்க்க வோடிவாடி
அமுத கல்யாணி (ம)

வ-ம்:—அல்லி மெல்லி அல்லி மெல்லி அல்லியல்லி யல்லி.

[தோழிகள் குடங்களை எடுத்துக் கொண்டு வந்தவர்கள் உற்றுக்கேட்டு]

செங் வ-ம்.—அடி. இதென்னடி விந்தையாய் யிருக்கின்றது. எவனோ ஒருவன் பயித்தியக்காரனைப்போ லிருக்கின்றான். நம்முடைய அரசியின் பேரைச் சொல்லி ஜலத்தில் எதையோ உரைக்கின்றானே.

[அர்ச்சுனன் தோழிகளைக் கண்டு கூத்தாடிக்கொண்டு பாடுதல்]

ஷை மெட்டு

அர். ஜாலமேனடி ஜாலமேனடி சரஸரத்தினமே
உனே தழுவியணேயவிரசமீறி நானுமித்தினமே (ம)

செங். வ ம்.—அடி இதென்னடி இழவாயிருக்கின்றது. ஐயையோ நம்மை விடமாட்டான்போல் தெரிகின்றதே வாருங்களடி எல்லோரும் வோடிப்போய் ராணியிடம் தெரிவிப்போம்.

[தோழிகள் ஓட்டமெடுக்க அர்ச்சுனனும் பின்பற்றி யோடுகின்றுன்]

(சீன் முடிவு)

---

சீன்—10. இடம்—அல்லியின் ஏகாந்தம்.

நடிகர்:—அல்லி, தோழிகள்.

அல். வ-ம்.—சேடிகாள்! என்னவிசேடம் எதற்காக இவ்வித சோகத்துடன் ஓடிவந்தீர்கள்.

செங்- வ-ம்.—அம்மணி நாங்கள் என்னவென்று சொல்வோம்.

## தோழிகள் பாட்டு

தந்தனத்தானே-என்ற மெட்டு

கண்ணிகள்

பொன்னின்குடமெடுத்து—நாங்கள்
பொய்கைக்குப் போயிருந்தோம்
அன்னேயே அங்குகண்ட—சேதிதன்னே
அறிவிக்கவந்தோம் (பொ)

மத்தனேபோலொருவன்-படித்துறை
மத்தியில் நின்றுகொண்டு
பித்தனேப்போலேநின்று-மருந்தை
பேசியுரைத்தானின்று (பொ)

அல்லியென்றுசொல்லுவான்-மணவாள
னுனவநானேஎன்பான்
வல்லிவல்லிஎன்பான்-என்னேக்கூட
வந்திடநேரமென்பான் (பொ)

வ-ம்:—மகாராணி தமது பொய்கைக்கரையில் யாரோ ஒரு புருடன் அரசன்போலக் காணுகின்றுன், ஒருசமயம் உங்களேக் கண்டேன் மோகங்கொண்டேன் ஓடியொளித்தாள், இன்னும் காண

வில்லே, வாடியோடி முத்தந்தாடி என்று லஜ்ஜைமறந்து பிதற்றிக்கொண்டு உங்கள் பெயரைச் சொல்லி உரக்கக் கூவியழைக்கின்ருன், நகைக்கின்ருன், படுக்கின்ருன், விழிக்கின்ருன், எங்களை நாடிவந்து அணைக்கின்ருன். நாங்கள் சண்டித்தோம், பயங்காட்டினேம், அவன் அஞ்சவில்லே, காவலில் வைத்துவந்தோம். உத்திரவின்படி நடக்கின்ருேம் தாயே.

## அல்லி பாட்டு

என்பேரைசோல்லி—என்ற மேட்டு

ஆரடி ஆரடி ஆரடி ஆரவன் அல்லிஎன் பேரைசொல்லி
வெகு-ஆங்காரமாக மருந்தை யுரைத்திடும் அப்பாதகனைத் தள்ளி
ஆற்றுமணலி லுருட்டு
ஆற்றுமணலி லுருட்டு
ஆற்றுமணலி லுருட்டு (ஆர)

அல். வ-ம்.— செங்கமலம். கொஞ்சமும் அஞ்சா நெஞ்சத்துடன் என் பேரைச் சொன்ன சண்டாளனை இந்தக்ஷணமே கொண்டுபோய் வைகையாற்று மணலில் தள்ளி உருட்டிக் கொல்லுங்கள்.

[யாவரும் செல்கின்றனர்]

(சீன் முடிவு.)

---

சீன்—11. இடம்—ஆற்றங்கரை.

நடிகர்:—அர்ச்சுனன் தோழிகள்.

செங். வ-ம்,—ஐயா! இங்கே சற்றுநேரம் இரும். அல்லிவந்து உம்மைக் சல்யாணம் செய்து கொள்வாள்.

## அர்ஜுனன் பாட்டு

பாண்டியதேசந்தான்-என்ற மேட்டு

ஆற்றுமணலிலே வீற்றிருந்தால் அல்லி
அணையவருவாளோ சேடியரே
சாற்றுவீரிப்போதே நேர்த்தியுடன் அடி
தாதியரே பிரக்யாதியரே (ஆற்)

[தோழிகள் வெப்பம் தாளாது பரதவிக்கின்றனர் அர்ச்சுனன் ஒருத்தியை பிடித்துகொண்டு]

## அர்ச்சுனன் பாட்டு

ஷை மேட்டு

அல்லியரசாணிக் கேற்றவண்டி நான்
ஆணில்மிகுந்த அழகனடி

நல்லகுணவந்த ராஜனடி அடி
நங்கையரே தோழி மங்கையரே (அல்)

அர். வ-ம்.—அடிஎன் கண்மணிநாள். எங்கே அல்லி, எப்போது வருவாள்.

தோழி. வ-ம்.—அடி இதென்னடி புதுமையா யிருக்கின்றது, நம்மா லிங்கு நிற்கமுடியவில்லை, இவன் ஆடியோடிவிளையாடுகின்றானே வாங்களடி நாம்போய் மகாராணியிடம் தெரிவிப்போம்.

[செல்கின்றனர்]

(சீன் முடிவு.)

---

## சீன்—12. இடம்—அல்லியேகாந்தம்.

நடிகர்:—அல்லி, தோழிகள்.

அல். வ-ம்.—சேடிகாள். அந்தப் பாதகன் தொலைந்தானா.

செங். வ-ம்:—அம்மணி அவனைக் கொண்டுபோய் ஆற்று மணலில் நிறுத்தினோம், மகாராணி நாங்க ளென்னவென்று சொல்வோம். பழையபடி ஆடுகின்றான் பாடுகின்றான். அல்லியைக் கூட்டி வாருங்களென்று குதிக்கின்றான் எங்கள் பாதங்கள் கொப்ப ளித்துவிட்டது. நாங்கள் வோடிவந்து விட்டோமம்மா.

### அல்லி பாட்டு

தாரதிலாரா—என்ற மெட்டு

சேடியரே அடி செங்கமலம்
சேதியைக் கேட்டிடு வாயமலம்
தேடிய பாதக னவியு மோடிட
செய்வாயே—ததி
செய்வாயே
தேக்கிய தூக்கினி லிடுவாயே (சே)

அல். வ-ம்.—செங்கமலம் முன்பின் யோசியாமல் அந்தப் பாதகனைக் கொண்டுபோய் தூக்குமரத்தில் போட்டுக் கொன்றுவிட்டுவா. போ சீக்கிரம். [செல்கின்றனர்]

(சீன் முடிவு.)

---

## சீன்—13. இடம்—தூக்குமரம்.

நடிகர்—தோழிகள், அர்ச்சுனன்.

பவ. வ-ம்.—ஐயா! இதோ இந்த மரத்திலேறி நில்லும், அல்லிவந்து உம்மை ஆலிங்கனம் செய்வாள்.

அர். வ-ம்.—இதிலெப்படி யேறுவது. எனக்குத் தெரியாதே. சற்று யேறிக்காட்டு பார்க்கலாம்.

பவ. வ-ம்:—என்னேயா ஆண்பிள்ளேயா யிருக்கின்றீர், இதில் யேறத் தெரியா தென்கிறீர், அடி செங்கமலம் வாடி நீதான் யேறிக் காட்டு.

[செங்கமலம் தூக்கிலேறிக் காட்ட அர்ச்சுனன் பலகையைத் தட்டிவிட்டு ஆடுகின்ருன்]

## அர்ச்சுனன் பாட்டு

நாக்கைப் பிதுக்குவது—என்ற மெட்டு

நாட்டில் புதுமையடி நீ
நல்லஊஞ்ச லாடுவது
காணவுங் காட்சியடி நீ
கண்ணே சிமிட்டுவது

கண்டேனடி செங்கமலம் நீ
சாலாட்டு மாய்கைதனே
போது மிறங்கிவாடி நீ
பொன்னூச லாடினது (நா)

[செங்கமலல் உயிர்விட தோழிகள் அழுதுகொண்டே போகின்றனர்]

(சீன் முடிவு.)

---

சீன்—14. இடம்—அல்லியின் ஏகாந்தம்.

நடிகர்:—அல்லி, தோழிகள்.

அல். வ-ம்.—பவளச்சேனு! எங்கே செங்கமலம் ஏன் அழுதுகொண்டு வருகின்றீர்கள்.

பவ. வ ம்.—அம்மணி! தூக்குமரத்தில் யேறும்படி அவனுக்குசொல்ல அவன் தெரியாதென்று மறுத்தான். செங்கமலம் யேறிக்காட்டின சமயம் அந்தப்பித்தன் பலகையை தன்காலால் தட்டிவிட்டான், செங்கமலம் இறந்துவிட்டாளம்மா.

அல். வ-ம்.—ஆ! ஆ! செங்கமலம் இறந்துவிட்டாளா.

[விசனித்துப் பின்]

### அல்லி பாட்டு

என்பேரைச்சோல்லி-என்ற மெட்டு

செங்கமலத்தாதி சேனக்கதிபதி
செத்துமடிந்திடவே-அங்கு
செய்திட்டபாவியை உக்கிரமாகாளி
தேவியின் சந்நதியில்
சேர்த்துமே கொல்லுவீர் சேடியரே (சே)

வ-ம்:—பவளச்சேனு! இந்தக்ஷணமே சென்று அந்தப் பாதகனை நமது பத்திரகாளிக்குப் பலிகொடுத்து வா. போ சீக்கிரம்.

[போகின்றனர்]

(சீன் முடிவு)

---

சீன்—15. இடம்—காளிகோயில்.

நடிகர்:—அர்ச்சுனன், தோழிகள்.

பவ. வ-ம்.—ஐயா! அம்மனை நமஸ்கரித்து வரங்கேளும் அல்லியை வரவழைத்துக் கொடுப்பாள்.

### அர்ஜுனன் பாட்டு

பார்க்கப்பார்க்க ஆனந்தம்-என்ற மெட்டு

கண்ணிகள்

உன்னையன்றி தெய்வமிந்த உலகிலுண்டோ
ஓங்காரி சிங்காரி கெம்பீரியம்மா (உன்)

மன்னியசிங்க மேறுங்கன்னியே எங்கள்குல
மாரிசிவன் மகிழும்பாரி மாமகிடசம்மாரி மாதரியம்மா (உன்)

பாதமலர்பணியும் பாலனெனதுமுகம்
பாராய்வரமதனைத்தாராய் துயரனைத்துந்தீராய் பார்வதியம்மா (உன்)

தாசன்குஞ்சிதபாதம் பேசுந்தமிழ்க்குகந்த
தாயேநல்வரந்தருவாயே சஞ்சலந்தவிர்ப்பாயே சங்கரியம்மா (உன்)

வ-ம்.—ஹே! பராசக்தி, மகமாயே, சூலினி, சண்டிகே, துர்க்கே, மாகாளி, பேய்க்காமத்திற் கிடுபட்டு என்கண்ணன் உன் அண்ணனையும் மறந்து இக்கெதி யடைந்தேன். தாயே கண்பாரம்மா.

பவ. வ-ம்;—அம்மணி! எங்களரசி இந்த நரபலியைக்கொடுத்து வரச் சொன்னாள் வாங்கிக்கொள்.

காளி. வ-ம்.—பெண்களே! நமதரசிக் கெப்படி யாண்வாடையாகாதோ அதுபோலெனக்கும் ஆண்பலி கூடாது. ஆனதால் உங்களில் ஒருத்தியைப் பலிகொடுத்தால் பெற்றுக்கொள்கிறேன்.

(தோழிகள் பயந்து ஓடிவிடுகின்றனர்)

(சீன் முடிவு.)

---

சீன்—16. இடம்—அல்லியின் ஏகாந்தம்.

நடிகர்.—அல்லி, தோழிகள்.

அல். வ-ம்.—சேடிகாள்! அந்தப் பித்தனை வெட்டி அம்மனுக்குப் பலி கொடுத்தீர்களா.

பவ. வ-ம்.—அரசியே! தங்களுக்கு எப்படி ஆண்வாடை யாகாதோ அதுபோல் தனக்கும் ஆண்பலி கூடாதென்று பெண்பலி கேட்கின்றாள் காளியம்மன்.

அல். வ-ம்:—என்னடியிது வெகு விந்தையா யிருக்கின்றதே.

அல்லி பாட்டு

சேனைக்கதிபதி-என்ற மெட்டு

என்னடி என்னடி விந்தையானதிது எந்தன் மதுரையிலே
அவன்-எந்திர மந்திரங் கற்றவனோஅல்லதிந்ரப்ரஸ்தன் தானோ
ஏகிமுன் சேடியே மாபாவியை பூதக்கிடங்கில் பூட்டு (என்)

அல். வ-ம்.—பவளச்சேன! அவனைக் கொண்டுபோய் நம்முடைய பூதக்கிடங்கில் போட்டு பூட்டிவிட்டுவா. சண்டாளன் பூதங்களுக் கிரையாகட்டும். (செல்கின்றனர்)

(சீன் முடிவு)

---

சீன்—17. இடம்—பூதக்கிடங்கு.

நடிகர்:—அர்ச்சுனன், தோழிகள், பூதங்கள்.

[பூதங்கள் ஆரவாரக் கூச்சலிடுகின்றன. தோழிகள் அர்ச்சுனனைக் கொண்டுவந்து]

பவ. வ-ம்.—பூதங்களே! இந்த நர மனிதனைக் கொன்று தின்று பசியாறுங்கள்.

[பூதங்கள் சப்தமிடுகின்றன தோழிகள் செல்கின்றனர்]

அர். வ-ம்.—பூதங்களே! நான்யார் தெரியவருமா. மகா பலசாலியாகிய பீமசேன மகாராஜனின் தம்பி என்பெயர் அர்ச்சுனன் அல்லியைக் கல்யாணம் செய்ய வந்திருக்கின்றேன்.

(பூதங்கள் அர்ச்சுனனை உட்சார
வைத்துப்பாதம் பிடிக்கின்றன)

## அர்ச்சுனன் பாட்டு

துமபினமோரி-என்ற மெட்டு

பஞ்சணையழகாய் விரித்திருக்கிறதே
பருவமிதே மருவவாராய் (பஞ்)
மிஞ்சியேமாரன் வஞ்சியேஎந்தன்
மேலெய்கின்ருன் பாணம்
அஞ்சுகமேபெண் ரஞ்சிதமேஎன்
அன்னமேநன் மயிலேகுயிலே (பஞ்)
இங்கிதலீலைக் கங்கஜன்நானே
ஏந்திழையே மானே
சங்கரலிங்கன் தமிழ்ப்பதம்பாட
சரவியே நாம்கூட (பஞ்)

(சீன் முடிவு.)

---

சீன்—18. இடம்—அல்லிதர்பார்.

நடிகர்:—தோழிகள், அல்லிமெல்லி.

(கிருஷ்ணன் மெல்லிவேடத்துடன் வருகின்ருன்)

## மெல்லி பாட்டு

அம்மாமதுரை மீனாட்சி-என்ற மெட்டு

கண்ணிகள்

எந்தன் நாயகனைக் காணேன் அவ
ரிருக்கு மிடமுந் தோணேன் தேடியே
யேங்கிவாட லானேன்
இங்கு வந்து நானே (எந்)

தங்கத்துவாரகை என்னூரு நாங்கள்
தங்கைமா ரிருபேரு இப்போது
தனியாய் வந்தேன்பாரு
தணிந்தபதில் கூறு (எந்)

மெல். வ-ம்:—அல்லியின் காதல்கொண்ட அருச்சுனன் படாத பாடு பட்டு காரிய சித்தியாகாமல் பூதகிடங்கி லடைபட்டிருக்கின்ருன். அவனை யழைத்துவரவே கோபால கிருஷ்ணனுகிய நான் இவ் வேடம் புனைந்து வந்திருக்கின்றேன், இனி தர்பாரைநாடி விசாரிப்போம்.

[சேவகியிடம்]

அம்மா அரசியைக் காணவேண்டும் உத்திரவுதாரு.

சே. வ-ம்.—இங்குநில் நான் சென்று விசாரித்து வருகிறேன் (அல்லியிடம்) அம்மணி யாரோ ஓர் ஸ்திரி தங்களைக் காண வந்திருக்கின்றுள்.

அல். வ-ம்.—ஆனுல் வரவிடுவாய். [மெல்லியிடம்]

சேவ. வ-ம்:—அம்மா தாங்கள் போகலாம்.

[மெல்லிதர்பார் முன்சென்று]

மெல். வ-ம்:—அம்மணி நமஸ்காரம்

அல். வ-ம்.—கல்யாண்.

## தர்க்கம்

உன்னையாரழைத்தார் என்ற மெட்டு

அல். எந்ததேசமம்மா

மெல். துவாரகைவாசமம்மா

அல் சொல்லுவாய்பேரென்ன

மெல். மெல்லியென்றுசொல்வார்

அல். எதற்காயிக்குவந்தாய்

மெல். பதியைத்தேடியம்மா

அல். அவனெவனென அறிவிப்பாய்

மெல். அப்படியேதெரிவிப்பேன்

அல். சரிசரியவன் சவிஸ்தாரம்சொல்லுவாயே

## மெல்லி பாட்டு

மாண்டனரோ மன்னவர் என்ற மெட்டு

தனதுபேர்மெல்லிஎன்பார் எந்தன்
தங்கைபேர் அல்லி என்பார் (என)

மனமுடனென்னை மணமதுமுடித்த
மணவாளனென் தங்கைமேல்
மையல்கொண்டு துடித்து
எனதுசொல்லினையும் கேளாமல்தடுத்து
இங்குவந்தானம்மா மங்கையேதெரிகுவாய் (என)

வ-ம்—அம்மணி! என்பேர் மெல்லி என்தங்கைபேர் அல்லி. அவளுக்கின்னுங் கலியாணமாகவில்லை என் கணவன் என் தங்கைமேல் ஆசைகொண்டு சதா அவள் கியாபக மேலிட்டு அல்லி அல்லி என்று சொல்லித் திரிவதுடன் குளங்கண்டவிடத்தில் மருந்துரைப்பான், பித்தனைப்போல் பிதற்றுவான், வீட்டை விட்டு

வந்து இன்றைக்கு எட்டுநாளாகிறது, இங்குவந்ததாக சிலர் சொல்லக் கேட்டுவந்தேன், தயவு செய்யவேண்டும் தாயே.

அல். வ-ம்,—அப்படியா, என்பேர்கொண்ட வேறொரு ஸ்திரி உலகில் இருப்பதாக நான் கேட்டதில்லை, இருக்கட்டும் அந்தப்பித்தன் தான் உன் நாதனே.

## அல்லி பாட்டு

மோகலாகிரியானேன்-என்ற மெட்டு

பாவியவனென் பேரை
கூவியே சொன்னானென்று
ஆவியகற்றும் பூதக்
சாவினில் போடச் சொன்னேன் நீ

அங்கவன் வுயிருடனிருந்தால்
அழைத்துக் கொண்டுபோ
அழைத்துக் கொண்டுபோ
அழைத்துக் கொண்டுபோ (பா)

அல். வ-ம்—அவன் என்பேரைச் சொல்லி கண்டபடி பினத்தினானென்று பூதக்கிடங்கில் போடச் சொன்னேன், உயிருடனிருந்தால் அழைத்துக் கொண்டுபோ பவளச்சேனா அந்தத் துஷ்டனையனுப்பிவிடு. [செல்கின்றனர்]

(சீன் முடிவு.)

---

சீன்—19. இடம்—முன்காடு.

நடிகர்:—கிருஷ்ணார்ச்சுனன்.

[அர்ச்சுனன் துடைமீது கிருஷ்ணன் சயனித்திருத்தல்]

அர். வ-ம்.—மாமா; கோபாலா. இன்னமும் நித்திரையா துடைகள் வலி எடுக்கின்றதே, போதும் போதும் எழுந்திரும்.

[கிருஷ்ணன் எழுந்து]

கிரு. வ-ம்.—அர்ச்சுனா! ஆ. ஆ. வெகுநேரம் நித்திரை செய்துவிட்டேன், அர்ச்சுனா இதென்ன ஆச்சரியம் இன்றைக்கு பலவித சொர்ப்பன மல்லவோ கண்டேன்.

அர். வ-ம்.—அதென்ன மாமா. சற்று சொல்லும் கேட்போம்.

## கிருஷ்ணன் பாட்டு

### கும்மி

கண்டசனவின் பலனைச் சொல்லிவாரேன்
காண்டிபனே சற்று கேட்டிடுவாய்
அண்டையிலிருந்த அர்ச்சுனு நீயந்த
அல்லிமே லதிக மோகங்கொண்டு (க)

மாமதுரைநாடிப் போகும்போது குற
வஞ்சி யொருத்தி மருந்துதர
தாமதமின்றி குளத்தி லுரைத்திடத்
தாதியர் கண்டுனை கூட்டிச்சென்று (க)

ஆற்றுமணலிலே போட்டுருட்டி வுந்தன்
ஆவியைப் போக்கிடத் தூக்கிலிட்டு
போற்றிசெய் காளிக்கு யேற்றிபலியிடப்
போகமா தேவி தடுத்ததினுல் (க)

பூதக்கிடங்கி லடைத்திடவும் ஒரு
பூவையினு லிங்கு வந்ததுபோல்
சாதகமான கனவுகண்டேன் முத்து
சாமி சரபகவி சாக்ஷி (க)

கிரு. வ-ம்.—அர்ச்சுனு! அவ்வித மிருக்குமோ.

அர். வ-ம்:—மாமா. கனவோ நினைவோ, அப்படி யொன்றுமில்லை மாமா.

## கிருஷ்ணன் பாட்டு

### நாக்கைப்பிதுக்குவதேன்-என்ற மெட்டு

கைகாப்பு மோதிரமும் உன்
காதிலகுங்குண்டல மெங்கே
மெய்யாக சொல்லவேணும் இந்த
வேளை மயங்காமலே (கை)

தங்கமதாணி எங்கே பட்டு
சல்லாவுருமா லெங்கே
சங்கையிலாமல் சொல்லாய்
தனஞ்செயனே எந்தன்முன்னே (கை)

கிரு. வ-ம்.—அப்படியானுல் உன்னுடைய ஆடையாபரணங்களெங்கே.

அர். வ-ம்:—மாமா! தாங்கள்கண்ட கனவின்படி நடந்த துண்மைதான். அந்தக் குறத்தியால் மோசம் போனேன் மாமா.

கிரு. வ-ம்.—மோசம் போனையா. குறத்தியிருக்குமிடம் தெரியுமா உனக்கு.

அர். வ-ம்.—தெரியும்.

கிரு. வ-ம்.:—முன்னதாகச் சென்று ஆபரணங்களை வாங்கிக்கொண்டு வா. பின் அல்லியைக் கல்யாணம் செய்து வைக்கிறேன்.

[செல்கின்றான்]

கிரு. வ-ம்:—நாம் பழையபடி குறத்திவேடம் பூண்டு மாய்கையால் அனேக குறவர்களை உண்டாக்கி அர்ச்சுனனை மைபப்புடைத் தனுப்ப வேண்டும். [செல்கின்றான்)

(சீன் முடிவு)

---

சீன்—20. இடம்—மலைச்சாரல்

நடிகர்.—குறத்தி, குறவர், அருச்சுனன்.

அர். வ-ம்—அடி என்னை இக்கெதியாக்கிய ராமக்கா ஓராமக்கா ஓதிம் மக்கா. ஓதிம்மக்கா பொம்மக்கா. ஓ பொம்மக்கா.

குற. வ-ம்.—ஏண்டாய்யே. என்ன கூப்டுரே. மருந்து பலிச்சுதா, கல் யாணமாச்சுதா.

## அர்ஜுனன் பாட்டு

### ஐபரியாத-என்ற மெட்டு

தந்தமருந்தாலே ஒரு சாரமில்லே ஆச்சியரே
தந்த ஆடையாபரணம் தந்திடுவாய் கைதனிலே (க)

வஞ்சியரேவுன் மருந்து வசியம்செய்ய வில்லையடி
வஞ்சகமெனைச் செய்தாயே வம்புக்காரியே ராமக்கா (உ)

குறியுரைத்த துண்மையடி குளிகைபொய்யாய் போனதடி
அறிவேனடி வுன்சமர்த்தை ஆபரணம்கை கொடடி (ங)

அர். வ-ம்.—அடி குறத்தி. ஏராமக்கா, அம்மா, மகா கெட்டிக்காரி போதும். என் ஆடைகளைக் கொடுத்துவிடு.

குற. வ-ம்—ஏண்டாய்யே! மருந்தை உரைச்சியா. அல்லி வந்தாளா. ஆலிங்கனம் செய்தாளா.

அர். வ-ம்.—மருந்தை உரைத்து என்கையும் தேய்ந்து விட்டது. அல்லி வரவுமில்லை ஆலிங்கனம் செய்யவு மில்லை. இப்போது

நீதான் வந்திருக்கின்றாய், தயவு செய்து என் ஆடையாபரணங்களைக் கொடுத்துவிடு.

குற. வ-ம்:—என்னடாய்யே. ஓ. ஓ. யேது, என் மருந்தைக் கொடுத்தால் உன் ஆடைகளைக் கொடுப்பேன்.

அர். வ ம்.—ஆ. அப்படியா சமாச்சாரம், என்னை யாரென்று நினைத்தாய். [அடிக்கநெருங்க]

குற. வ-ம்.—ஐயோ ஓ மாமா ஓ அண்ணு வீடு கொட்ட வஸ்தாடு பின்னரண்டி. [குறவர்கள் வெளிவந்து அர்ச்சுனனை அடிக்க]

அர். வ-ம்.—அம்மா போதும். புண்ணியம்செய்த பலன் பெறுவாய். வஸ்திராபரணங்களைக் கொடுத்துவிடு.

குற. வ-ம்.—ஜாக்கிரதை இனிமேலிங்கு நில்லாதே. இதோ எடுத்துக்கொண்டு ஓடிப்போய்விடு. [சகலரும் செல்கின்றனர்]

(சீன் முடிவு.)

---

## சீன்—21. இடம்—முன்காடு.

நடிகர்—கிருஷ்னன், அருச்சுனன்.

அர். வ-ம்—மாமா. இதோ ஆடையாபரணங்களை வாங்கிக்கொண்டு வந்து விட்டேன். இனிமேல் ஜாலம் செய்தால் நான் பிழைப்பது கடினம்.

### தர்க்கம்

மாமயிலே மையல்—என்ற மெட்டு

அர். மாமயிலாள் மோகந்தானேன் மாயவனே மண
மாலைசூட ஜாலமேனோ மாதவனே

கிரு. மாமதுரை மாதரசி மையலாலே அவ
மானமாவா யேனிம்மோகம் தையல்மேலே

அர். இருக்காதாவி
கிரு. ஏனடாபாவி
அர். சோதிக்காதே
கிரு. வாதிக்காதே
அர். பாதம்பணிவேன்
கிரு. மாதின் நினைவேன்
அர். வேறுர் துணையே
கிரு. வாராயினியே

அர். தேகமெல்லாம் சோகமானேன் ஸ்ரீதரனே தாசன்
தியாகராஜன் பூஜிதத் தாமோதரனே

கிரு. சாகஸமேன் வாங்கரம் நாடிடலாம் சென்னை
சங்கரலிங்கன் சங்கீதம் பாடிடலாம்

கிரு- வ ம்:—அர்ச்சுனு ! இதென்ன சபல புத்திகொண்டு இப்படி பினத்துகின்ருய். வேண்டாம் வீண்வாது செய்யாதே இது ஆகாத காரியம், வந்தவேலையைப் பார்த்து செல்வோம் வா,

அர். வ-ம்.—மாமா! என்னுயிர் போனலும் சரியே. இந்த மதுரையை விட்டு ஒரு அடி எடுத்து வைக்கமாட்டேன் அல்லியைக் கல் யாணம் செய்துகொள்வதே தீர்த்தயாத்திரை பலனென்று எண்ணி யிருக்கின்றேன். ஆதலால் அந்த,

## அர்ச்சுனன் பாட்டு

அல்லியைக் கல்யாணம்செய்ய அநுக்ரகம் செய்மாமா (அ)

நல்லதல்ல யிவ்வாது நல்லகால மிப்போது
சொல்லைதடுத்தால் தீது தொடரு முன்னையே மாது (அ)

தீர்த்தயாத்திரை பலன் தெரிந்தது கைமேல்நலன்
பார்த்தனென் னனுகூலம் பரந்தாமனே இக்காலம் (அ)

தங்கையா முனக்கல்லி தாரமெனக்கு மெல்லி
சங்கதிதன்னைச் சொல்லிதா னுனைபோற்ற வல்லி (அ)

அர். வ-ம்.—மாமா எப்படியாவது அனுக்ரகம் செய்து அல்லியைக் கல்யாணம் செய்து தருவது தங்கள் கடமை இந்நன்றியை நான் என்றும் மறவேன் ஜாலம் செய்யாமல் தயவு செய்யவேண்டும் மாமா.

## கிருஷ்ணன் பாட்டு

பூமிமேச்சிடு மண்ணுமலை-என்ற மெட்டு

அல்லி அல்லி என்று சொல்லிசொல்லி நிற்கும்
வண்டனே வளர்முண்டனே பெருந்திண்டனே
தீர்த்த யாத்திரைக்குவந்த நேர்த்தியிதோ அடா
வீணனே மதி மதியீனனே (அ)

பார்த்த மாதர்தம்மை சேர்த்துவைக்கவோ நான்
வந்தது பெயர்தந்தது துணைகொண்டது
உந்தன்—பக்ஷம்வேண்டாம் நானே இக்ஷணமே நகர்
செல்லுவேன் சேதி சொல்லுவேன் (அ)

கிரு. வ-ம்.—அர்ச்சுனா! உன் இஷ்டம்போல் நீ இங்கேயே சுற்றிக் கொண்டிரு நான் சென்று வருகிறேன்.

அர். வ-ம்.—மாமா! எங்கே செல்லப் போகின்றீர். உமது திருவடிகளை விடமாட்டேன்.

கிரு. வ-ம்.—இதென்னடா சங்கடமாய் முடிந்தது அர்ச்சுனா இப்போது நான்சொல்லுகிறபடி செய். நான் பிடாரனாக வேடம் பூண்டு உன்னை அழகிய சர்ப்பமாக்கி எடுத்துக் கொண்டுபோய் அல்லியிடம் விட்டுவருகிறேன். அவளுன்னை சயனக்கிருகத்தில் வைத்துப் படுத்துக்கொள்வாள். நீ உன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொள் பின் யோசித்து எப்படியும் செய்வோம்.

அர். வ-ம்.—மாமா பாம்பென்றால் படையுங்கலங்குமே, அவள் ஒரு மனோகரமான பெண், அஞ்சாது என்னை வாங்கிவைத்துக் கொஞ்சுவாளா.

கிரு. வ-ம்.—அவளை சாமானியப் பெண்ணென்று மதியாதே, இதற் கெல்லாம் அஞ்சாள்.

அர். வ.ம்.—சரி தங்களிஷ்டம்போல் செய்யுங்கள். [செல்கின்றனர்)

(சீன் முடிவு)

---

## சீன்—22. இடம்—அல்லி தர்பார்.

நடிகர்—பிடாரன், அல்லி, தோழிகள், பாம்புவுருவான அருச்சுனன்.

[அல்லிதர்பாரில் அமர்ந்திருக்கிறாள்)

பவ. வ-ம்.—அம்மா பிடாரனொருவன் அழகிய சர்ப்பமொன்றை கொண்டு வந்திருக்கிறான்.

அல். வ-ம்.—ஆனாலவனை இங்கழைத்து வா.

(பிடாரன் சர்ப்பத்துடன்வெளிவந்து)

பிடா. வ-ம்.—தண்டமு மகாராணி மொக்குத் தானுதல்லி வந்தனம் தாயே வடதேசம் கல்கத்தா பம்பா புனா படோதா மைசூர் ஐதரா பாத் மலையாளம் தெலுங்குதேசம் சமஸ்தானங்களெல்லாம் சுத் திக்னு மகாராணியே இங்கேகண்டுக்கவந்தன் க தாய்க்குத் தெரி யும்புள்ளே யருமை. இந்த ஜாதிபாம்பு பார்த்திருக்க மாட்டிங்க உங்க தங்கக்கண்ணாலே பார்க்கணும் வேடிக்கை மின்னலைக்கண் டாப்போலேத் தானிருக்கும். மனிசாபக்கத்தேவரும் முத்தங் கொடுக்கும் பூமாலை கணக்கா கழுத்திலே சுற்றிக் கொள்ளும்

கொஞ்சம் தமாசு பாருங்கே கண்கட்டி வித்தையில்ல மையில்ல கருமானமில்ல.

பவ. வ-ம்—அடே! சர்ப்பத்தை ஆட்டிக்காட்டு பார்போம்.

(பிடாரன் பாம்பை ஆட்டுவித்தல்]

பவ. வ-ம்.—அடே! வுன்னிடம் என்னென்ன வகைபாம்புக ளிருக்கின்றது.

## பிடாரன் பாட்டு

அல்லி லேலோ தம்பி அல்லி லேலோ—என்ற வர்னமெட்டு

கண்ணிகள்.

தங்கப்பாம்பு இது தங்கப்பாம்பு அம்மா
தாவிவிளை யாடிவரும் தங்கப்பாம்பு (த)

நாகப்பாம்பு இது நாகப்பாம்பு அம்மா
நாதர்முடி மேலிருக்கும் நல்லப்பாம்பு (நா)

பச்சைப்பாம்பு இது பச்சைப்பாம்பு அம்மா
பட்டுநிறம் போலிருக்கும் பச்சைப்பாம்பு (ப)

தண்ணிப்பாம்பு இது தண்ணிப்பாம்பு அம்மா
ஜாடையிலே ஆடிவரும் தண்ணிப்பாம்பு (த)

அல் வ-ம்:—பிடாரா அதெல்லாம் இருக்கட்டும் தற்சமயம் இந்தபாம்பு எனக்கு தேவையா யிருக்கிறது ஆனதால் இதற்கென்ன விலே வேண்டும்.

பிடா வ-ம்.—அம்மணி இது என்தங்கை வளர்த்து வரும் பாம்பு அவளுடன் மேலயிருந்து விளையாடும். என் பிழைப்பு கெட்டுப் போகும் கண்பார்க்கணும்.

அல் வ-ம்:—நல்லது இன்றிரவு இங்கிருக்கட்டும். நாளை வரும்போது வேண்டிய சன்மானம் தருகின்றோம்.

பிடா வ-ம்:—பாம்பு என்னைப் பிரிந்தால் இளைச்சுப் போகும் இடை போட்டு தருகிறேன். குறைந்த இடைக்குப் பொன் தரவேணும் அம்மணி.

அல் வ-ம்:—அப்படியே ஆகட்டும். பவளச்சேனா இந்தப் பாம்பை இடைப் போட்டு எடுத்துக் கொண்டுவா.

[செல்லுகின்றனர்]

(சீன் முடிவு.)

சீன்—23. இடம் சயனக்ருகம்

நடிகர்—அல்லி, அர்ச்சுனன் தோழிகள்.

[அல்லி பாம்பை அருகில்வைத்து சயினிக்கின்ருள் அர்ச்சுனன் யதாரூபத்துடன்]

வ-ம்:—நல்ல நிசிவேளை அரமனைமெல்லாம் மொடுங்கி யிருக்கிறது இரத்தினமயமான தீபங்கள் சலிக்காமல் ஒளியை வீசிக்கொண் டிருக்கின்றன. வாசனை வர்த்திமணமும் நறு மலர்களின்மணமும் சந்தனம் பன்னீர் ஜவ்வாது அரகஜாமணமும் இவள் சரீரமணமுங் கலந்து கம்மென்று படுக்கையறையி லிடமில்லாது நிறைந்திருக்கிறது. இவ்வளவு சம்பன்னையாகவும் ரூபவதியாகவும் பரமயுவதியாகவும் போகவதியாகவு மிருக்கிற இந்தப் பெண்ணரசிக்கு புருஷ இன்பமே வேண்டாமென்று மனம்வெறுத்து போனகாரணம் யாதோ மன்மத வைரிகளாகிய எந்தப் பாபிகளின்சாபமோ என்ன விருதமோபிரம்மசிருஷ்டிகளில் எறும்புமுதல்யானையீருக எற்பட்ட ஜீவகோடிகளுக்கெல்லாம் இயல்பாகவேதொடர்ந்து வந்திருக்கிற விஷயவாசனை இவளைப்பற்ருமல்விட்டது என்னவிசித்திரமோ சிங்காரநூல்களுக்கே லக்ஷணலக்ஷியங்களாக அமைந்த இந்தசரீரமதையனுபவிக்காவிட்டால் பிறகு அந்தசாஸ்திரங்களுக்கே பெருமையில்லை அல்லது இந்த சிங்கார தேவதா பிரசாதம் தேவர்கள்கூடி எனக்கென்றே இதுவரையில் அன்னியர்கள் தீண்டாமல் சுத்தமாகவைத்திருக்கின்ருர்கள் போலத்தெரிகிறது. இப்படிபட்டசமயமினிமறு முறைகிடைப்பதரிது. காலம் வீண்போகலாகாது. நல்லது இவளை அழைத்துப் பார்ப்போம். ஹேசந்திரானனே! மனோஹாரிணி! இந்தசமயமும் தூங்கிக்கெடுக்கின்ருயே கண்திறந்து பார் கருணையற்றவளே உன்கடைக்கண்ணேக்கிற்குக் காத்திருக்கின்றேன் இவ்வளவுகாலமாக நான் உன்னைவந்துகண்டு கொள்ளவில்லை என்கின்றகோபமா அதற்கு நானிதுவரையிலடைந்த தண்டனைகள் போதாதா. லஜ்ஜையைமுழுதும் விட்டவனுகிய என்னை முல்லை யரும்பின் பந்திபோன்ற பற்கள் தெரிந்து தெரியாமலும் விளங்க புன்னகையுடன் அழைத்தா லாகாதா நான்பட்ட சிரமங்கள் மாறுமே கிருதார்த்தனுவேன் புண்ணிய தீர்த்தங்கள்முறையே யாடிவந்ததின் சத்பலன்தான் உன் சேர்க்கை கண்ணே.

## அர்ச்சுனன் பாட்டு

இராகம்-பைரவி, தாளம்-ரூபகம்.

பல்லவி

நித்திரைசெய்கு வதேனே இங்
நேரமுன்னுவலைக் கோரிவந்தேனே (நித்)

(உபபல்லவி சந்தத்தொடர்)

நெஞ்சத்தினிடம் தளர்ந்து
மஞ்சத்தில் புரண்டுருண்டு (நித்)

நேமத்துயர் மதுராபுரி
யூர்மெச்சிய மதனுகரி (நித்)

நினைத்து மனமன மிளகினேனே
அணைத்திட விட மணுகினேனே (நித்)

அர். வ.ம்.—பெண்ணரசே! இதென்ன புதுமை இப்படியொரு நித்திரையா மனமயக்கமா ஜாலமா ஸாதனையா, கண்மணி கண் விழித்துப்பார் பிரியகாந்தே இந்திரியங்களுக்கு தலைமையான மனதாகிய சூத்திரத்தை உன்வசப்படுத்திக் கொண்டோமென்கின்ற மமதையா லிந்தவிதம் பாவையாகச் செய்து கூத்தாடி மகிழ்ந்து நித்திரை செய்கின்றாயே இனி யுன்னைவிட்டு யேமாந்து போக மாட்டேன் கண்பார்.

சரணம் ஷை மெட்டு

அத்திமத்தகத்தை யொத்ததனமானே
அல்லியரசானிஎன்னுங் காமத்தேனே
மெத்தவுன்மையலால் சித்தமிளைத்தேனே
மெச்சுங்குஞ்சிதம்தமிழ்ச் சொல்படித்தேனே

வேண்டுமெனைக் குறியாது
மெல்லணை மீதிலிப்போது
ஈண்டுனக் காகுமோவாது
இருளோங்கிய நேரமீது (நித)

அர். வ.ம்.—ஏது இவளைக் காத்து இனிய மொழிகள் பேசி மன்றாடுவதில் பலனில்லை அந்த மாயனை கோபாலனைக் கொண்டுதான் சித்தியாகவேண்டும் நமது முயற்சியா லாவதொன்றுமில்லை என்ற ஞானம் மாறிப்போகிறதே நல்லது கண்ணனை யடுத்து எந்தவிதத்திலுங் காரியத்தை முடித்துக் கொள்கிறேன்.

(பாம்புருவாக மாறுகிறான்
தோழிகள் வெளிவந்து)

தோழி. வ.ம்.—தாயே! தலைவிரிகோலமாகப் படுத்துறங்கிய காரணமென்ன. பொழுதுவிடிந்தது எழுந்திருமம்மா

அல். வ.ம்.—தோழிகாள்! சர்ப்பத்துடன் வெகுநேரம் விளையாடிக்கொண்டிருந்ததினால் இவ்வித அலங்கோலம் நேர்ந்தது.

[பிடாரன் வந்து]

பிடா. வ-ம்.—அம்மா! பாம்பைக் கொடுங்க மவாராணி என் தங்கை என்னை ரெம்பசண்டை புடிச்சாம்மா ராத்திரி எல்லாம் தூக்கமேயில்லே.

அல். வ-ம்.-தோழிகாள்! பாம்பை இடைபோட்டுக் கொடுத்து விடுங்கள்.

தோழி. வ-ம்.—வாடா! பிடாரா.

[பிடாரன் பாம்பை வாங்கிக்கொண்டு]

பிடா. வ-ம்.—ஐயோ!பாம்பு இளைச்சிபோச்சே என்ன சேஞ்சிங்கம்மா.

(செல்கின்றான்)

(சீன் முடிவு)

---

சீன்—24. இடம்—முன்காடு.

நடிகர்—கிருஷ்ணன், அர்ச்சுனன்.

கிரு. வ-ம்.—அர்ச்சுனா! உன் மனம்போல் இரவெல்லாம் இருந்து வந்தாயே உன் கோரிக்கை நிறைவேறினதா என்னிடம் சொல்ல லஜ்ஜைப் படாதே.

அர். வ-ம்.—மாமா! விருதாசிரமம் மணலைப்பிழிந் தெண்ணை எடுத்தாலும் எடுக்கக் கூடும் இவள்மனதை வசப்படுத்த சாத்தியப் படவில்லையே என்னமாமா! இரவெல்லாங் கண்விழித்த பெருமைதான் சுகமோ அற்பம் அசிருக்கட்டும் இனி என்னாவி நிற்காது.

கிரு. வ-ம்.—ஏன் என்னசெய்யச்சொல்லுகிறாய்.

அர்ச்சுனன் பாட்டு

விடமாட்டேன்-என்ற மெட்டு

குணமானகலியாணம் கோலாகலம்மாமா (கு)

மனதோடெனக்குசெய்தால் மகாராசியல்லிதனை
தினமேயுனைப்பணிவேன் தேசமிதில்புகழ்பெறுவேன்
ஸ்ரீபரந்தாமா மையல் சீறுதேமாமா
சித்திரக்கட்டிலில் வைத்தவள்பாதத்தை
நித்தமும்போற்றிட சித்தஜனேற்றிட (கு)

அல்லியரசாணி அம்மாள்துரைராணி
நல்லகலியாணிஎன் னாசைக்கேற்றமதவேணி
நாணுசரித்தேனே கிருஷ்ணா
நாதனேதானே அந்த

நங்கையாளல்லியை இங்குநான்கூடிட
சந்ததம்செந்தமிழ் சங்கீதம்பாடிட (கு)

வ-ம்.—மாமா! கலியாணம் செய்தால்தான் என்மனந் தேறுதலடையும் காலம் போக்கவேண்டாம், என்னை சோதிக்க வேண்டாம்

வம்.—அர்ச்சுனு, போதும் உன்னுடன் தீர்த்தயாத்திரைக்குவந்து நான்கொண்டபுண்ணியம்போதும், ஒரு யுக்திசொல்கிறேன்கேள் நீயொரு விருத்தப்பிய வேதியனுகவும் நான் ஓர் சிறுபெண்ணுகவும் வேடம் பூண்டு அல்லிவேட்டையாடி களைத்துவரும் வழியில் தண்ணீர்ப்பந்தல் வைத்துக்கொண்டிருந்து தந்திரமாகபேசி அவளரண்மனையைபடுத்து கௌத்துவமாக நமது கோரிக்கையை முடித்துக்கொண்டு போவோம்வா.

[செல்கின்றனர்.)

(சீன் முடிவு.)

---

சீன்—25. இடம்—கானகம், பன்னசாலை

நடிகர்:—அல்லி, தோழிகள், கிழஅர்ச்சுனன், கோபாலகிருஷ்ண பெண்.

### அல்லி பாட்டு

நீகேதகுரா—என்ற மெட்டு

வேட்டையாடுவோம்வாரீர் தோழிமாரேவன (வே)
வேட்டையாடுவோம்பெருங் கூட்டமுடனேவருங்
காட்டுமிருகங்களை வாட்டிகுடிகள்துய
ரோட்டிவருவோம் வன (வே)

நாகக்கணையைநா னேகமெடுத்துபிர
யோகம்செய்துமிருகம் சாகவடித்துவீர
மாகவனத்தில் அதி (வே)

வ-ம்,—தோழிகாள்! துஷ்ட மிருகங்களின் கோஷ்டம் இன்றுடன் முடிந்தது. இனி குடிகளுக்கு யாதொரு பயமுமில்லை. பவளச் சேனு வெகுவேகமாக வேட்டையாடியதினிமித்தம் எனக்கு·

### அல்லி பாட்டு

இங்லீஷ்நோட்

தாகமேலிடுகுதடி மனச் சோகமேவருகுதடி
தண்ணீர்கொண்டுவந்தென் சஞ்சலம்தீரடி (தா)

வேட்டையாடிநொந்தேனடி வந்த வேனலால்களைத்தேனடி
வேளையிப்போதெந்தன் தாகத்தைதீரடி (தா)

அல். வ-ம்.—அடங்காத தாகமேலிட்டு தேகம் சோகமாகின்றது. அதோ எதிர்தோன்றும் சாவடிக்கருகில் தண்ணீர்ப் பந்தல்போல் தெரிகிறது, போய் ஜலங்கொண்டு வாருங்கள்.

[பவளச்சேனை பந்தலருகில் சென்று]

பவ வ-ம்.—அம்மா! பந்தலுக்குள் ளிருப்பது யார்?

[கோபால கிருஷ்ணப் பெண் வெளிவந்து]

வ-ம்:—யாரம்மா அழைத்தது என்ன சமாச்சாரமம்மா.

பவ வ-ம்.—எங்களரசி வேட்டையாடியதி னிமித்தங் களைத்து தாகத்திற்கு ஜலங் கேட்கிறார்கள் செம்பில் சிறிது ஜலங் கொடுங்களம்மா.

[கோபால கிருஷ்ணபெண் ஜலந்தர வாங்கி அல்லியிடம் கொடுக்க தாகந் தணிகின்றாள்]

பவ. வ-ம்.—அம்மா! ஓர் சிறு பெண்ணும் ஓர் விருதாப்பிய கிழவனும் இங்கு தண்ணீர் தருமம் செய்து வருகின்றார்கள். என்னகாரணமோ தெரியவில்லை.

அல். வ-ம்.—அப்படியா அருகில்சென்று விசாரிப்போம்.

[பந்தலை யணுகி]

அல். வ-ம்.—அம்மா தாங்கள் யார். எதற்காக இங்கே இத்தருமம் செய்து வருகின்றீர்கள்.

கிரு. வ-ம்.—அம்மா என்பெயர் கிருஷ்ணவேணி. இவர்பெயர் பார்த்தலிங்கேஸ்வர ஐயர். நாங்கள் வடதேசம் இந்திரபுரி, பிள்ளையில்லாக் குறையை முன்னிட்டு ஸ்தலயாத்திரை வந்தோம். வேனல் காலத்தைக் கழிக்க இத்தருமம் செய்து வருகின்றோம்.

அல். வ-ம்:—பாவம். இந்தக் கானகத்தில் தனியாக இருக்கவேண்டாம் சிலகாலம் என்னரண்மனையில் தங்கியிருந்து செல்லுங்கள். நான் உங்களுக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்கின்றேன்,

கிரு. வ-ம்:—அம்மணி கௌரிவிரத மௌனக்குண்டு நாளை முதல் ஆரம்பிக்க வேண்டும். அதற்கு வேண்டிய சாமக்கிரியைகளை சித்தம் செய்துதரக் கோருகிறேன்.

அல். வ-ம்;—அப்படியே உன்மனம்போ லாகட்டும். வாருங்கள் போகலாம். [செல்கின்றனர்]

(சீன் முடிவு.)

---

சீன்—26. இடம்—சயனுக்ருகம்.

நடிகர்:—அல்லி, தோழிகள், கிருஷ்ணர்ச்சுனர்.

[அல்லி நித்திரையி லிருக்கின்ருள் கிருஷ்ணர்ச்சுனர் யதாரூபமெடுத்து]

கிரு. வ-ம்.—அர்ச்சுன இதுதான் நல்ல சமயம். நித்திராதேவியை அல்லியின்மேல் விட்டிருக்கின்றேன். இதோ உன் தங்கையிட மிருந்து வரவழைத்த யானைத்தலை தாலியைக் கட்டிவிட்டுவா. சீக்கிரம் செல்வோம்.

[அர்ச்சுனன் தாலியைக் கட்டிவிட்டு]

அல். வ-ம்-மாமா அவள் விழித்துப்பார்த்து அறுத்தெரிந்து விட்டால்.

கிரு. வ ம்:—எவ்வித ஆயுதத்தினல் அறுத்தாலும் அறுபடாதிருக்க சாபமிட் டிருக்கிறேன் நில்லாதே சீக்கிரம்வா.

அர். வ-ம்.—மாமா பொம்மை விருதை அறுத்தெரிந்துவிட்டு போக லாம். [இருவரும் போகின்றனர், தோழிகள் வந்து]

பவ. வ-ம்.—அம்மா இன்னுமா நித்திரை எழுந்திருங்கள்.

## பாட்டு தர்க்கம்

வந்தே நானுனைக்கோரி—என்ற மெட்டு

பல்லவி

தோழி. விடிந்தது பொழுதெங்கள்தாயே இந்த
வேளையில் தூக்கம் நீங்கிடுவாயே (வி)

அநுபல்லவி

படித்துரைக்கேகிடும் நேசமுமாச்சு
பாங்கியரழைக்கின்ளூம் பாருமிதுதருணம் (வி)

ஷை மெட்டு

பல்லவி

அல்லி. சத்தமிட்டேனடி கத்துகுறீர் சவிஸ்
தாரமறியாமலே சாரமுடனேவந்து (சத்)

அநுபல்லவி

அர்த்த ராத்திரிவரை அரவத்துடனேவிளை
யாடினதாலே நித்திரை யானதிதுசமயம். (சத்)

[அல்லி மெல்ல எழுந்து கழுத் தைப் பார்த்துக் கோபத்துடன்]

## அல்லி பாட்டு

மட்டியிருட்டுவேளை என்ற மெட்டு

பட்டி அரண்மனையைக் கிட்டி
விருததனை வெட்டிதாலிக்கட்டிச் சென்றானே (ப)

எட்டிப் பிடியுங்கடி கட்டி யுதையுங்கடி
வெட்டிப் புதையுங்கடி தோழியரே (ப)

பெண்டாள வேஷமெடுத்து வந்தான் எனையடுத்து
சண்டாளனைக் கண்டால் துண்டாக்குவேன் (ப)

அல். வ-ம்:—தோழிகாள்! திருட்டுப்பயல் என்னவேலை செய்தான் பார்த்தீர்களா எங்கே அந்தப் பிராமணப் பெண்ணுங் கிழவனும் தேடிப் பிடித்துவாருங்கள். [தோழிகள் செல்கின்றனர்]

அல். வ-ம்.—இதென்ன புதுமை. என்னகேலி இந்தத்தாலி என்கழுத்தில் கட்டின கள்ளன் யார். விஞ்சையா மந்திரமா திரஸ்கரணி வித்தையா எவன் வந்தான், எப்படி துணிந்தான். என்னஸாகஸ்யம். என்வீரம், என்மானம் என்னகீர்த்தி, என் திடமான விரதம், குற்றமில்லாக் கற்பு, எல்லாவற்றையு மொரே காலத்தில் கொள்ளை கொண்டானே, அவன் தேவனு, நரனு, எவனிந்த ஆண்மை படைத்தான். என்மனம் பதறுகிறதே, மானமல்லவோ பெரிது. ஆகா சகிக்கமுடியாத கோபமும் துக்கமும் உண்டாகிறதே.

## அல்லி பாட்டு

சுந்தரப்பியாரி—என்ற மெட்டு

கண்ணிகள்

இதுவென்மாயம் எவர்செய்யுபாயம்
இதுவு முனதருளோ ஈசனே சொக்கநாதா (இ)

எந்தன் கழுத்தினிலே யானைதலைபோல் தாலி
இறுக்கிக்கட்டிச் சென்றானே இதற்கென்ன செய்குவேனே (இ)

அவமான மாகினேனே அல்லிமகாராணியானேனே
எவர்செய்தமாயமிதோ ஈசனேசொக்கநாதா (இது)

[அல்லி மயங்கியிருக்க தோழி[illegible]வந்து]

தோ. வ-ம்.—அம்மா நகர மெங்கும் தேடியும் அவர்களைக் காணோம் என்ன செய்கிறது.

அல். வ-ம்.—நல்லது நாலுதிக்கு மன்னர்களுக்கும் ஓலை எழுதி வரவழைத்து நாம் சொல்லும் பிரதிக்ஞையை செய்துபோகும்படி கட்டளை யிடுங்கள்.

தோ. வ-ம்.—அப்படியே செய்கின்ருேம்.

(சீன் முடிவு.)

---

சீன்—27. இடம்—தர்பார்

நடிகர்:—அல்லி, தோழிகள், கிருஷ்ணன், பீமன், இராஜர்கள்.

[அல்லி தர்பாரில் வீற்றிருக்க இராஜர்கள்வந் தமர்ந்தபின்]

பவ. வ.ம்.—மன்னர்களே! இதோ எங்களரசியின் கழுத்திலிருக்கிற தாலியை நீங்கள் கட்டவில்லை என்று இந்த நெய்க்கொப்பறையில் கையிட்டுநெல்லைக்கசக்கிப்பிரமாணம் செய்து போகவேண்டும்.

[இராஜர்கள் பிரமாணம் செய்து போகின்றனர் கிருஷ்ண பீமன் வந்து]

பீம. வ-ம்;—மாமா! என்ன காரணம் உண்மையைக் கூறிவிடும்.

கிரு. வ-ம்.—எல்லாம் வுன்தம்பியின் தீர்த்தயாத்திரை வைபவ விசேடந்தான். நடந்துவிட்டது காரியம் அக்கினியாலுனக்கு ஆபத்து நேராதிருக்க நான் கிருபை செய்கிறேன். உன் கைவரிசையைக் காட்டிவிட்டு சென்றுவிடு.

பீம. வ-ம்.—மாமா, அப்படியா சமாசாரம். நல்லது உமது வேலையை பார்த்துக்கொண்டு முன்னாடி சென்றுவிடும். நான் வருகிறேன்.

[கிருஷ்ணன் சத்தியம் செய்து செல்கின்ருன். பீமன் நெய்க்கொப்பரையை எடுத்துக் குடித்துவிட்டு நெல்லைக்கசக்கி ஓடுகின்ருன் அல்லி எழுந்து]

அல் வ-ம்:—பாங்கிகாள்; அஸ்தினபுரத்து மன்னர்களில் ஒருவனாகிய பீமசேனன் தனக்காகவும் தனது சகோதரருக்காகவும் பிரக்கினை செய்யவந்தவன் ஆவேசங் கொண்டவன் போலெழுந்து நம்மை யவமதித்து செய்துப் போன காரியத்தை கவனித்தீர்களா. அந்த தடிப்பயலை லேசில் விடப்படாது இப்போதே ஜெயபேரிகைமுழக்கி நமது படைகளை சித்தப் படுத்துங்கள் இதோ வருகின்றேன்.

(சீன் முடிவு.)

---

சீன்—28. இடம்—யுத்தகளம்.

நடிகர்:—அல்லி, தோழிகள்.

[அர்ச்சுனன், கிருஷ்ணன் சுபத்திரை சகாதேவன் பீமன்]

அல். வ ம்.—தோழிகாள்! மகா வீரதீரர்களாகிய பாண்டு மன்னர்கள் பல நம் போரிட்டுப் புறமுது கிட்டோடினர் இன்னும் யார்வருகின்ருர்களோ பார்க்கலாம் நீங்கள் நமது சைனியங்களை அணிவகுத்து நிறுத்துங்கள்.

[தோழிகள் செல்கின்றனர் சகாதேவன் வருகிருன்]

## சகாதேவன் பாட்டு

கதஞகுதகலராகம்-என்ற மெட்டு

பல்லவி

| | | |
|---|---|---|
| மயிலேரிவா | வடிவேலவா | |
| வரதாசிவா | சரவணோர்பவா | (மயி) |

அநுபல்லவி

| | | |
|---|---|---|
| மயிலாஜல | மலைநாயகா | |
| மாதவன்மருகா | மாசிலாமுருகா | (மயி) |

சரணம்

| | | |
|---|---|---|
| கார்த்திகேயனே | கதிரேசனே | |
| கானக்குறவள்ளிக் | கானநேசனே | |
| மூர்த்தியானவா | மோனஞானவா | |
| மோகனச்சொரூபா | தியாகனேபிரதாபா | (மயி) |

சகா. வ ம்.—அண்ணவுடைய வுத்திரவைப் பெற்றுக்கொண்டோம். இனி நாம் தாமதமின்றி சமர் செய்யவேண்டும். ஆயினும் சற்று யோசிப்பதே உசிதம். என்ன! அறியாப்பேதையாகிய ஓர் பெண்ணுடன் ஸ்ரீ கிருஷ்ணர்ச்சுன பீமர் முதலிய மகா பலசாலிகளும் எதிர்நின்று யுத்தஞ் செய்வதற்கஞ்சி புறமுதுகிட்டோடிய காரணந் தெரியவில்லை, மேலும் தற்கால பலத்தை யோசிக்க அல்லியிடம் விஜயலக்ஷிமி வீற்றிருக்கின்ருள் ஆகவே இவ[illegible] யுத்தம்செய்து வெற்றிபெற நம்மாலாகாது. ஆனுல், ஏதாவதொரு சூக்ஷியால் இவளை மடக்குவதே மேன்மை. (யோசித்து) ஆம், இதுவே தகுந்த யோசனை, எதற்கும் இவளுடன் சற்று பேசிப் பார்ப்போம். மதனியாரே நமஸ்காரம்.

அல். வ-ம்:—ஆரடா அவன். மதனியாரேயென்ற மகா விஸ்தாரமாகப் பேசுகிறவன்.

சகா. வ-ம்.—நான்தான் உமது மைத்துனன் சகாதேவன்.

அல்.. வ-ம்:—அடே! பொடிப்பயலே அடா! வடித்தனமான வார்த்தைகளை யாடாதே இப்போ திங்கு நீ எதற்காக வந்தாய்.

சகா வ-ம்.—மதனி! நீ எதற்காக இங்கு வந்தாய்.

அல். வ-ம்.—உங்கள் உயிரைப் போக்கடிப் பதற்காக வந்தேன்.

சகா வ-ம்:—அப்படியா அவ்விதம் உனக்குக் கோபம் நேர நாங்கள் செய்த குற்ற மென்ன.

அல். வ-ம்.—அடே !பயலே என் வீட்டுக்குத் திருட்டுத்தனமாய் வேஷம் போட்டு வந்து இம்மாங் கல்யத்தைக் கழுத்தில்கட்டிவிட்டோடி வந்த சண்டாளனைக் கொன்று உங்களையும் ஊரைவிட்டோட வடிக்கின்றேன்.

சகா .வ-ம். ஏ! ஸ்திரியே! தொட்டுத் தாலிகட்டிப் போகும் வரை தகுந்த பாதுகாப்புடன் தன் மானத்தைக் காத்துக்கொள்ள யேதுவில்லாமலும் தாலி கட்டினவனைக் கண்டு கொள்ள சக்தியில்லாமலும்போன நீயாவது எங்களுடன் யுத்தம்செய்து ஜயிப்பதாவது பாவம் பெண்புத்தி பின்புத்தி என்னும் தன்மையால் பலவிதம் பேசுகின்ருய். வீண்கெருவங் கொள்ளாதே துள்ளியமாடு பொதிசுமக்காதென்பதை தெரிவாயல்லவா ஏதோசிறுபிள்ளை யாயிற்றே என்று நினைக்கின்ருய் போலும். மலையைத்துளைப்பதும் சிற்றுளிதான் ஆத்திரப் பட்டு அலங்கோலத்துக் காளாகாதே உன் கழுத்தில் தாலிகட்டியது யார்தெரியுமா இவ்வுலகமெங்கும் புகழ்ந்தேற்றும் எனதண்ணுவாகிய வீர சூர தீர அர்ச்சுன மகாராஜர்தான் அவரே உனக்குத் தகுந்த மணாளன் இனி யோசிக்காதே உன் மதத்தை யடக்கவே ஆனைத்தலைபோன்ற தாலியை உன் கழுத்தில் கட்டிவந்தார். வீண் சிரமப்பட்டு அவமான மடையாதே இப்போதே என்னுடன் வந்து உனது மன்னனும் என அண்ணனைப்பணிந்து இல்லறவாழ்வைப்பெற்று வாழ்வாயாக.

அல். வ-ம்.—அடே! தறிதலைப்பயலே! சீ. சீ. மூடாத்மாவே. என்ன சொன்னுய். உனக்கு முன்வந்த வில்வீரரும் இப்படியே பேசி [illegible]தப்பி யோடினர். நீ எம்மாத்திரம் வீரதீரமிருந்தால் வில்லெடுத்து நின்று யுத்தம்செய் அல்லது பேடிப்போ லோடிப் பொய்விடு.

சகா. வ-ம்.—சே! சே! என்ன தெரிவித்தாய். பேஷ்! தாங்கமுடியாத சுமையைக் கழுத்தில் தாங்கிக்கொண் டிருக்கும்போதே உனக்

கிவ்வளவு வாயிருக்கின்றது. வாயிருந்தென்னபலன் பாவம் யேதோ பெண்ணாயிற்றே அதிலும் நமதண்ணன் மனைவியாயிற் றே என்று இதுவரை உனக்கு நற்புத்தி புகட்டினேன். யானை கொழுத்தால் தானே மண்ணைவாரிப் போட்டுக்கொள்ளும் என் னுங் கதைக்கிடாக நீயும் யானைத்தலை தாலிகட்டிக்கொண்டு இரா ஜர்கள் முன்னிலையில் அரசிஎன்று வந்துவிட்டாயே. இதில் தெரி ந்துவிட்டது உன் வீரத்தன்மை. எதோ வில்லை எடு பார்ப்போம்.

## தர்க்கம்.

சாரங்கந் தன்னிலோர்-என்ற மெட்டு

பல்லவி

சகா. துள்ளித் துடிக்காதே அல்லியே நீ
எந்தன் முன்னே வில்லை
துண்டித்து தண்டிப்பேன் சண்டிப்பாய்
பாரிளம் பெண்ணே (து)

அநுபல்லவி

வெள்ளைத் தனமாக வீண்வார்த்தை பேசுறாய்
வெட்கமற்றுக் கையை வீசி நடிக்கிறாய் (து)

பல்லவி ஷை மெட்டு

அல்லி. வெள்ளறிக் காயைப்போல் வீசுவேன்
ஓடடா பொடியா உந்தன்
வில்வீரம் என்னிடம் செல்லாது
பாரடா மடையா (வெ)

அநுபல்லவி

குள்ள நரியும் குளிருக் நஞ்சு மோர்டா
கோபத்திற் காளாகி சாகாமலே போடா (வெ)

## சகாதேவன் பாட்டு

ஷை மெட்டு

பல்லவி

அண்ணனுக்கேற்றமனைவி என்றேமனம்பொறுத்தேன்
இனி-அஞ்சிடாமலுந்தன் ஆவியைப்போக்கிடநினைத்தேன்

அநுபல்லவி

வண்ணப்பேச்சுக்குப் பின்வாங்குவேனோநானே
வாடாதெதிர்வந்து ஓடாமலேநின்று (துள்)

## அல்லி பாட்டு

ஷி மெட்டு

பல்லவி

சின்னப்பயலேநீ என்னிடத்தில்துடிக்காதே-உன்னை
சின்னபின்னமாகசெய்யுமென் வார்த்தைதப்பாதே (சி)

அநுபல்லவி

தன்னைஎண்ணாமல் தைரியம்பேசுறாய்
தட்சணமேயுன்னைப் பட்சணம்செய்குவேன்

[இருவரும் போர்புரிய சகாதேவன் பயந்தவனைப்போல் சாயல்காட்டி யோட அல்லி துரத்திச் சென்று புலிக்கூண்டி லகப்பட்டுக் கொள்கின்றாள்]

அல். வ ம்.—அடே திருட்டுப்பயலே. எதிர்நின்று யுத்தம் செய்யப் பயந்து தந்திரோபயத்தால் என்னை வஞ்சித்தா யல்லவா? திறந்துவிடுகின்றாயா என்ன.

சகா. வ ம்:—மதனியாரே மெத்த நமஸ்காரம், கோபம் வேண்டாம், அப்போதே சொன்னேனே கேட்டிருந்தால் இந்த அவமானமடைந்திருக்க மாட்டாயே ஏன். அண்ணி எங்கே உனது வீரம், ஜாண்பிள்ளை யானாலும் ஆண்பிள்ளைமே லென்னும் வார்த்தையைக் கவனித்தாயா, ஏன் இனிமேல் என்ன சொல்கின்றாய், இனி தப்புவது அசாத்தியம்; பாவம். அடங்காப்பிடாரிகள் அடங்கும் வகையிதுதான் என்பதை இனியேனுங் கற்றுக்கொள். கேவலம் பெண்பிள்ளையாகிய வுனக்கு இவ்வித கெருவ மிருந்தால் என் போன்ற ஆடவர்களுக் கெப்படியாம். ஐயோ! ஏன் வெறுளவெறுள விழிக்கின்றாய். இதோவருகின்றார் உனது மன்னவர் மாலே சூடிக்கொள். [கிருஷ்ணார்ச்சுன சுபத்திரை மூவரும் வெளிவந்து]

...ம்.—தம்பி சகாதேவா. எங்கே உன் மதனி க்ஷேமந்தானா.

...வ-ம்.—க்ஷேமமாகவே கூண்டிலிருக்கின்றாள் என் தங்கை.

அல். வ-ம்—அடே இடைப்பயலே என்ன சொன்னாய். யாரடா வுனக்குத் தங்கை, திருட்டுப்பயல்களில் முதல்தர மல்லவா நீ.

## தர்க்கம்

அல்லியென்று சொல்லும்-என்ற மெட்டு

அர். மாசிலாத பாண்டி தேசமாளும் அல்லி
மாதே என்னைக் கூடி மண
மாலைதன்னைச் சூடி உந்தன்
மையலாலே வந்து மெய்யாய் நானு மின்று
மயங்கினேனே பாரடி (மா)

அல். பார்ப்ப தென்னடா

அர். சேர்க்கத் தானடி

அல். மீறிப் பேசாதே

அர். கோரினே னடி

அல். கோரிவந்த வுந்தன் ஆவிப்போகுமேடா
கூடம்பேசா தோடா

அர். தயை செய்யடி

அல். தலை போமடா

அர். போனால் போகட்டும்

அல். ஆன தாகட்டும்

அர். ஆனந்தக் கல்யாண சோபனமே செய்ய
ஆனநாளு மீதடி (மா)

கிரு- வ-ம்:—பாண்டியகுலத் தரசியே! வீணாக யேனிந்தவாது செய்கின்றாய். உன்னுடைய பராக்ரமத்தைக்கண்டு இங்குள்ள அரசர்கள் மட்டுமல்ல. தேவர்களும் சந்தோஷிக்கின்றார்கள். பூர்வம் மலையத்துவஜ பாண்டிய ராஜகுமாரியாகத்தோன்றிய தடாதகை பிராட்டியார் எப்படி திருக்குவிஜயம் செய்து முடிவில சுந்தரேசரைத்திருமணம் செய்து கொண்டார்களோ அதுபோல அதேமரபில் தோன்றிய நீயுங்கொண்டவிருதத்தை இதுவரையில் பங்கமின்றி சாதித்துக் கொண்டுவந்தாய் நான் துவாரகபதியாகிய கோபாலன் இதோபக்கத்திலிருப்பவன் என் பக்தனும் மைத்துனனுமாகிய அருச்சுனன். இந்தத் தாலியுனக்கு அவனால் கட்டப்பட்டது. இது நான் செய்த மாயலீலை, உனக்கேற்ற ஒப்பற்றபுருஷன், இனி மனங்கலங்காதே. இந்தயுத்தம் எவ்வளவுகாலம் நடந்தாலும் இப்படியே நடந்துகொண்டிருக்கும் மேலும் எவ்வளவு காலத்திற்குப்பிறகும் ஒரு புருஷனை யடைந்து வாழ்வதே பெண்களுக்கு அணிகலம். அரசியே கோபத்தை விடு

சுப. வ-ம்.—அம்மா! அண்ணுவின் வார்த்தையைத் தட்டாதே. உன் போல் விரதம்பூண்டிருந்த அநேகபெண்களும் இப்படியே அவமானமடைந்து பார்த்தனே மணம்புரிந்தார்கள் அன்றியும் பெண்களுக்கு உகந்தபாக்கியம் மாங்கல்யந்தானே. எத்தனை நாளைக்குக் சன்னிப் பெண்ணுயிருந்தாலும் ஒரு நாளைக்கு மணமகனை அடையவேண்டிய கடமைதானே பெண்களுக்கேற்றது. நீயோ பட்டத்தரசி ஆண் துணையின்றி அரசு செலுத்துவதில் என்ன பிரயோசனம் உனக்குத் தெரியாதவிஷயம் நான் என்ன சொல்லப் போகிறேன் கோபத்தைவிடுத்து மணமாலே சூடுவாயம்மா.

அல். வ-ம்:—அப்படியே ஆகட்டும். வெளியில் விடுங்கள்.

கிரு. வ-ம்:—வெளியில்விடத் தடையில்லே கையிலிருக்குங் கத்தியைக் கொடுத்துவிட்டு எங்களுக்குயாதொரு இடையூறும் செய்வதில்லே என்று பிரமாணம் செய்துகொடு.

அல், வ-ம்:—அப்படியே சொல்படி நடக்கின்றேன்.

கிரு. வ-ம்.—சகாதேவா கூண்டைத் திறந்து விடு.

[சகாதேவன் கூண்டைத்திறக்க அல்லி வெளியில்வந்து யாவரையும் வணங்கி நிற்க மணமாலேமாற்றுகின்றனர் சகலரும் பாடுதல்]

பாட்டு

பித்தாபிறைசூடி-என்ற மெட்டு

மாயோன் மகிழ்மருகா திரு மயிலேறிய முருகா
தாயாகிய குகனேசர வணணேகந்த சாமி
நீயேகெதி எனவேதுதி நேரும் வரம்தருவாய்
சேயார்திருப் பழனுபுரி தேவேஎங்கள் கோவே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றுப்பெற்றது.

---

ஸ்ரீ கணநாயகர் அச்சுக்கூடம், சென்னை:—1933.

சென்னைமாநகரத்திலும், தென்தேசங்களிலும்
புகழ்பெற்ற விஜயவிகடன் பத்திராதிபராகிய
**கா. ச. கதிர்வேல்நாடார் எழுதிய**
விகடகோர்ட்டு விசாரணையென்னும்

# காத்திருந்தவன் பெண்ணை
நேற்றுவந்தவன்
## கொண்டுபோன கேஸ் (விலை அணா 8)

இதில் சில முக்கியரகசியங்களும், ஹாஸ்யங்களும் மாஜிஸ்டிரேட்டு விசாரணையுஞ் சேவகர்களின் தன்மையும், சிப்பந்திகளின் தன்மையும், வீட்டு வேலைக்காரிகளால்வருங்கேடும், பெண்களால்வரும் அவமானங்கள், வாலிபர்களால்வரும் தரிதலைத்தனம், கூத்தியால்வருங் கேடும், கொண்டவனைவிட்டுகண்டபடி திரிதல், குடியால் வருங்கேடு, கேலி பரியாசத்தில் உண்டாகும் தீங்குகள், பொய்மந்திரக்காரர்களால்வருங்கேடும். பெண்களை திருவிழாவிற்கு அழைத்துக்கொண்டுபோவதினால் வரும் அவமானங்கள், அதிகாரிகள் பணத்தாசையினால் விசாரிக்கும் விந்தை, சோதிடக்காரர்களின்கூற்று, காமத்தினால் பேய்ஆடுவதும், சில அதிசய தந்திரங்களும், பொய்சாக்ஷிக்காரர்கள்பேசும் விந்தை, பெண்கள் கள்ள கணவனுக்கு கடிதம் எழுதுவதும், ஆண்கள் கள்ள பெண்ணுக்கு கடிதம் எழுதுவது, பெண்ணுக்கும் ஆணுக்கும் தந்திரமாக உபயோகப்படுத்துவதும், பெரியபாளையத்தம்மன் கோவிலுக்குபோய் பெண் சொந்தபுருஷனை சொர்க்கமுறவும், கள்ளபுருஷனை வளர்ச்சிப்பெறவும் வரங்கேட்குதல், மத்தியில் இருந்தவர்களை மீட்டுவரும்விந்தையும், மாஜிஸ்டிரேட்டின் ஜட்ஜ்மென்ட்டு தீர்ப்பை படிக்கப்படிக்க மகா ஆச்சரியகரமாயிருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| தெள்ளியசிங்கம் மஹாபூலோகவிகடனென்னும் கலியுகவிகடன் | 0 | 5 | 0 |
| தாசியால்மோசம்போன சந்திரசேகரன் | 0 | 4 | 0 |
| பொப்பலிராஜன்கதை | 0 | 6 | 0 |
| பதிவிரதா சரித்திரமாகிய பாலநாகம்மாள் கதை | 0 | 8 | 0 |
| ஆங்கிலேய உற்பத்தி அல்லது ஆசிரியன் | 1 | 8 | 0 |

**N. T. மாணிக்கவேலு முதலியார்,**
நே. 24. முல்லாசாயபு தெரு, சென்னை.

Titelpage Printed at the Sree Gananayagar Printing Works, G. T. Madras.